வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 11.05.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 160 | பக்கங்கள் : 16



## குருந்தூர்மலை விகாரையின் மீள்நிர்மாணம் இன்று ஆரம்பம்!

- நேற்றிரவு ‘பிரித்’ ஓதப்பட்டது
- முழு ஏற்பாடும் இராணுவத்திடம்
- சுகாதார பகுதிக்கும் அறிவிப்பில்லை
- தமிழ் ஊடகவியலாளர்களுக்கு தடை

*முல்லைத்தீவு, மே 11*

முல்லைத்தீவு - குருந்தூர் மலை தொல்லியல் பகுதியில் பௌத்த விகாரைக்கான புனர்நிர் மாணப் பணிகள் இன்று ஆரம் பமாகின்றன. இந்த தொடக்க நிகழ்வை தொடக்கி வைப்பதற் காக அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் தலைவர் ஜெகத் சுமதிபால குருந்

15

மாகாணங்களுக்கு இடையிலான

## பஸ் சேவைகள் இடைநிறுத்தம்

*கொழும்பு, மே 11*

இலங்கை போக்குவரத்து சபை, மாகாணங்க ளுக்கு இடையிலான பஸ் சேவைகளை இடைநிறுத் தியுள்ளது.

இதன்படி, நேற்று நள்ளிரவு முதல் எதிர்வரும் 30ஆம் திகதி வரை மாகாணங்களுக்கு இடையிலான பஸ் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நேற்று நள்ளிரவு

15

## யாழ்ப்பாணத்தில் 3 சிறுவர்களுக்கும் கொரோனா தொற்று

*யாழ்ப்பாணம், மே 11*

யாழ்ப்பாணத்தில் மூன்று சிறுவர்களும் கொரோனா தொற்றாளர் களாக நேற்று அடையா ளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண பல்கலைக் கழக ஆய்வுகூடத்தில் நேற்று நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரி சோதனை முடிவுகளிலேயே இந்த விவரம் வெளியாகி யுள்ளது. இதன்படி, யாழ்ப் பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவை சேர்ந்த 7, 12 வயதுகளை உடைய இரு சிறுமிகளும், 13 வயது சிறுவன் ஒருவ ருமே இவ்வாறு கொரோனா தொற்றாளர்களாக அடை யாளம் காணப்பட்டுள்ளனர்.

வேகமாக பரவும் கொரோனாவை கட்டுப்படுத்த

# மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து உடனடியாக தடை

## ஜனாதிபதி தலைமையில் நேற்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் முக்கிய முடிவுகள்

கொழும்பு, மே 11

**கோவிட் 19 தொற்றுநோயை ஒழிக்க அனைத்து தரப்பினருடனும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கொண்ட கலந்துரையாடல்களையடுத்து அனைத்து மாகாணங்களுக்கும் இடையில் பயணக் கட்டுப்பாடு நடைமுறைக்கு வந்துள்ளது. நேற்று நள்ளிரவு நடைமுறைக்கு வந்துள்ள இந்தப் பய ணக் கட்டுப்பாடு எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படும்.**

15

விடாது துரத்தும் பேராபத்து

## யாழ்ப்பாணத்தில் 36 பேர் உட்பட வடக்கில் 37 பேருக்கு கொரேனா!



*யாழ்ப்பாணம், மே 11*

யாழ்ப்பாணத்தில் 36 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 37 பேர் கொரோனா தொற்றா ளர்களாக நேற்று மட்டும் அடையாளம் காணப் பட்டனர் என்று வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரி வித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய

15

## நேற்றைய தினம் 26 பேர் கொரோனாவுக்கு பலி



கொழும்பு. மே 11

இலங்கையில் நேற் றைய தினம் 26 பேர் கொரோனா தொற் றால் மரணமாகினர் என்று அறிவிக்கப்பட் டுள்ளது. இதன் மூலம் இலங்கையில் கொரோனாவால் மரணமடைந் தவர்களின் எண்ணிக்கை 827 ஆக அதிகரித் துள்ளது.

## 2,573 கொரோனா தொற்றாளர் நேற்று அடையாளம்

*கொழும்பு, மே 11*

இலங்கையில் நேற்று 2,573 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்தது. இதன் மூலம் இலங்கையில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 1,28,000 ஐ தாண்டியுள்ளது.

இலங்கையில் நேற்று முன்தினம் 2,672 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட் டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீனாவிடமிருந்து இரண்டு மில்லியன் தடுப்பூசியை இலங்கை கோரியுள்ளது

தூதுவர் பாலித கோஹன தெரிவிப்பு

*பீஜிங், மே 11*

சீனாவிடமிருந்து இரண்டு மில்லியன் கொரோனா வைரஸ் தடுப்பூசியை இலங்கை கோரி யுள்ளதாக சீனாவிற்கான இலங்கை தூதுவர் பாலித கோஹன தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சார்பில் இந்த வேண்டுகோளை தான் முன் வைத்துள்ளாரென குறிப்பிட்ட பாலித கோஹன, இதில் ஒரு பகுதி நன்கொடையாக வழங்



கப்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

உலகின் 62 நாடுகள் சீனா வின் தடுப்பூசியை பயன் படுத்துகின்றன எனவும் பாலித கோஹன தெரிவித்துள்ளார்.

## முழு நாட்டையும் முடக்க வேண்டிய அவசியம் இன்னும் ஏற்படவில்லை

இப்படிக் கூறுகின்றார் அமைச்சர் வாசு

*கொழும்பு, மே 11*

கொரோனாத் தொற்றால் முழு நாட்டையும் முடக்க வேண்டிய அவசியம் இன்னும் ஏற்படவில்லை என்று அமைச் சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித் ததாவது:-

“2020 மார்ச் மாதத்தில் நாட்டை முடக்கியதன் மூலம் நாம் அனுபவத்தைப் பெற்றுள் ளோம். எனினும், விவசாயம் மற்றும் பெருந்தோட்டத் தொழில் போன்ற நமது அத்தியாவசியத் தொழில்

15



உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

போலந்து நாட்டைச் சேர்ந்த இரண்டாம் ஜோன் போல் பாப்பரசராக பதவி வகித்த காலத்தில் முதல்தடவையாக போலந்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்தார்.

போலந்து நாடு, கடும் கம்யூனிஷ சித்தாந்தைக் கடைப் பிடிக்கும் நாடு. அந்த நாட்டிலிருந்து ஒருவர் பாப்பரசராக தெரிவாகியிருந்தமை உலகையே ஆச்சரியப்படுத்தியிருந்தது.

அவர் போலந்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்த போது அவருக்குப் பலத்த பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. இலட்சக்கணக்கானவர்கள் பாப்பரசரைத் தரிசிக்க கூடியிருந்தனர்.

குண்டு துளைக்காத கண்ணாடிப் பெட்டி ஒன்றிலிருந்து கொண்டு பாப்பரசர் அங்கே கூடியிருந்தவர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கினார். கைகளை உயர்த்தி, “ஆண்டவர் உங்களைக் காப்பாற்றுவாராக”, என்று அவர் கூறியபோது, எதிரிலே நின்ற ஒருவர், “ஆண்டவர் எங்களைக் காப்பாற்றுவார். ஆனால், உங்களை குண்டுதுளைக்காத கண்ணாடி காப்பாற்றுமா?”, என்று கத்தினார்.

அது பாப்பரசர் காதுகளுக்கு கேட்டதும், அவர் சொன்னார்: “என்னை துப்பாக்கியால் யாராவது சுடலாம் என்ற அச்சம் பாதுகாப்பு தரப்பினருக்கு இருக்கிறது. அப்படி யாராவது சுட்டால் அந்தக் குண்டுகள் என்னைத் தாக்காதவாறு - என் உடம்பைத் துளைக்காதவாறு, பாதுகாப்பு வழங்கக்கூடிய இந்தக் கண்ணாடியை கண்டுபிடிக்கின்ற ஆற்றலை கடவுள் நமக்குத் தந்தார். அதனை பயன்படுத்தாமல் இருந்துவிட்டு, துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையானால் அது கடவுளின் தவறு அல்ல...” என்று.

அண்மைக் காலமாக ஈழநாடு பத்திரிகையை எந்தப் பக்கத்தை திறந்தாலும் கொரோனா தொடர்பான செய்திகளே அச்சுறுத்துகின்றன.

மூன்றாவது அலை, நமது நாட்டைத் தாக்குகின்றவரை, அது நமக்கு அச்சம் தருகின்ற விடயமாக இருக்கவில்லை என்பதைக் கவனித்திருப்பீர்கள்.

முதல்தடவையாக சுவிஸ் போதகர் ஒருவரால் யாழ்ப்பாணத்தில் தொற்று ஊடுருவியபோது அந்த போதகரை நம்மவர்கள் ‘வறுத்து’ எடுத்தனர்.

பின்னர் அந்த அச்சம் மெல்ல மெல்ல நம்மவர்கள் மத்தியிலிருந்து விலகியதை அவதானிக்க முடிந்தது.

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலை கொத்தணி உருவாகியபோதும் அதனைத் தொடர்ந்து பேலியகொடை மீன்சந்தை கொத்தணி என்று கொத்தணிகள் தொடர்ந்து உருவாகியபோதிலும் நமக்கு பெரிதாக அச்சம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

தொற்று உறுதிசெய்யப்பட்டவர்கள் ஒருசில நாட்கள் சிகிச்சை பெற்று வீடு திரும்புகின்றபோது, அட இவ்வளவுதானா என்று நம்மில் பலர் அதனைக் கருதத் தொடங்கினர். ஏதோ காய்ச்சல் வந்து சுகமடைந்ததுபோன்ற நினைப்பு நமக்கு வந்தது.

இத்தனைக்கும் நாட்டில் எப்போதாவது ஒருசிலர் அதுவும் வயது முதிர்ந்தவர்கள், வேறு நோய்களாலும் ஏற்கனவே, பாதிக்கப்பட்டவர்களே மரணித்தனர்.

இதனால், நாம் இன்னும் அதனை அலட்சியப்படுத்தினோம். ஆனால், இன்று நிலைமை தலைகீழாக மாறியிருக்கின்றது. கொரோனா வைரஸூம்தான் மாறியிருக்கின்றது. அது பல்வேறு வகையாக திரிபு அடைந்து இன்று வயது வித்தியாசமின்றி தாக்குதலை தொடுத்து வருகின்றது.

தினசரி வயது வித்தியாசமின்றி பலரும் மரணித்து வருகின்றனர். இன்னமும் நாம் பழைய நினைப்பிலேயே காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கின்றோம்.

கொரோனா வைரஸ் உங்கள் சுவாசப்பையை சென்றடைந்து உங்களை நெருக்கடிக்கு ஆளாக்குவதற்கு சில நாட்களாகலாம். அது தொண்டையில் இருக்கும்போதே மிக இலகுவாக அதனை அழித்துவிடலாம் என்று மருத்துவர்கள் தெரிவித்து வருகின்றனர்.

அடிக்கடி சுடுநீரைக் குடியுங்கள். தினமும் மூன்று தடவைகளாவது சுடு ஆவியில் வேது பிடியுங்கள், இப்படி செய்தாலே வைரஸ் உங்கள் தொண்டையிலேயே காணமல் போய்விடும் என்கிறார்களே... நம்மில் எத்தனை பேர் அதனைச் செய்கிறோம்.

முகக்கவசங்கள் அணியுங்கள், இரண்டு மீற்றர் தூரத்தை மற்றவர்களிடத்திலிருந்து விலகியிருங்கள், அடிக்கடி கைகளைக் கழுவுங்கள் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்களே நம்மில் எத்தனை பேர் அதனை கவனத்தில் எடுக்கின்றோம்?

பாப்பரசர், குண்டுதுளைக்காத கண்ணாடிகளை ஏன் பாவிக்கிறேன் என்று விளக்கமளித்த பின்னரும் அதுகுறித்து விசனம் தெரிவித்துக் கொண்டு கடவுள் நம்மைக் காப்பாற்றுவார் என்றால் நிச்சயமாக இருக்காது. நாம்தான் நம்மைக் காப்பாற்றவேண்டும். நம்மை மட்டுமல்ல நம்மைச் சுற்றி இருப்பவர்களையும்தான்.!

கடவுள் நம்மைக் காப்பாற்ற - பாதுகாக்க வழிகளைச் சொல்லித் தருவாரே தவிர, அவரே வந்து காப்பாற்ற மாட்டார்!

**- ஊர்க்குருவி.**

# நாட்டை மூன்று வாரம் மூடி குறை வருமான குடும்பங்களுக்கு ரூ. 20,000 வழங்குங்கள்!

## அரசிடம் மனோ எம்.பி. கோரிக்கை



**கொழும்பு, மே 11.**

**கொரோனா வைரஸ் தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக குறைந்த பட்சம் மூன்று வாரங்களுக்காவது முழு நாட்டையும் முடக்குமாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர், அரசிடம் இந்தக் கோரிக்கையை அவர் முன்வைத்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“அரசை ஆட்சிக்குக் கொண்டு வந்த முன்னணி பிக்கு முருத்தெட்டுவ ஆனந்த தேரர், “நாட்டில் வீதியில் விழுந்து மரணிக்க மட்டுமே மக்களுக்கு இன்று உரிமை உள்ளது” எனக் கூறுகின்றார். இந்த அரசை ஆட்சிக்குக் கொண்டு வந்ததால் இவரும் இந்த நிலைமைக்குப் பொறுப்பு கூற வேண்டும். எனினும், இதைவிட இந்த ஆட்சியின் இலட்சணத்துக்குச் சான்றிதழ் வேண்டுமா?

ஆரம்பத்தில் கொரோனாவால், வயதானவர்கள் மட்டுமே சாவார்கள் எனக் கூறப்பட்டது. இன்று கர்ப்பிணிகள் சாகின்றார்கள். குழந்தைகள் சாகின்றார்கள். ஏனென்றால், இன்று நாட்டில் உள்ள கொரோனா கிருமியின் வீரியம் அதிகரித்து விட்டது.

இன்று எம் நாட்டில் சீனா, தென்னாபிரிக்கா, நைஜீரியா, டென்மார்க், இந்தியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் வளர்ச்சியடைந்த கொரோனா கிருமிகள் உள்ளன. இவை எப்படி இலங்கைக்கு வந்தன? அரசின் கையாள் உதயங்க வீரதுங்க கூட்டி வந்த உக்ரைன் நாட்டு சுற்றுலாப் பயணிகள்தான் தம்முடன் இங்கிலாந்து கிருமிகளையும் கொண்டு வந்தார்கள். இப்படித்தான் எல்லாம் வந்தன. நீங்கள் உரிய வேளையில் விமான நிலையங்களை மூட மறுக்கிறீர்கள்.

இன்று நாட்டில் ஒரு நாளைக்கு 2600 நோயாளிகள். நேற்று 22 பேர் செத்தார்கள். இவை கணக்கில் எடுக்கப்பட்டவை மட்டுமே. இவற்றைத் தவிர இன்னமும் உள்ளனவா என் தேடிப்பார்க்க வேண்டும்.

நாட்டை மூட நீங்கள் மறுப்பது ஏன்? இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று, துறைமுக நகர சட்டமூலத்தை சபையில் ‘பாஸ்’ செய்துகொள்ளப் பார்க்கின்றீர்கள். அதுதான் தேவை என்றால், நாட்டை மூடி, நாடாளுமன்றத்தை மாத்திரம் திறந்து வையுங்கள்.

அடுத்தது, உங்களால், நாட்டை மூடி விட்டு, மக்களுக்கு நிவாரணம் தொகை வழங்க முடியவில்லை. ஒவ்வொரு குடும்பத்துக்கும் 20 ஆயிரம் ரூபா வழங்க வேண்டும். பணம் இல்லை. ஆனால், சீனி வரி குறைப்பால் திறைசேரிக்கு வராத நிதி உண்மையில் எங்கே போனது? அந்தத் தொகை ஆயிரத்து 600 கோடி ரூபா. அதில் எத்தனை குடும்பங்களுக்கு 20 ஆயிரம் ரூபா வழங்கலாம்?

நாட்டை மூடினால், நாளாந்த சம்பளம் பெறுவோர், சுய தொழில் செய்வோர் என எத்தனை குடும்பங்களுக்குப் பணம் கொடுக்க வேண்டும் என கணக்கெடுங்கள். எப்படியோ எல்லா அபிவிருத்தித் திட்டங்கள், புதிய வீதிகள், புதிய உடற்பயிற்சி ஜிம்கள் ஆகியவற்றை இடைநிறுத்தி வைத்து விட்டு, ஒரு குடும்பத்துக்கு 20 ஆயிரம் ரூபா வழங்குங்கள்.

கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி பதவிக்கு வந்தவுடன், அவர் இந்தியப் பிரதமர் மோடியின் வழியில் போகின்றார் என்று சொல்லப்பட்டது. இப்போது பார்த்தால் அது சரிபோல் தெரிகின்றது. பிரதமர் மோடி, அவரது குஜராத் ஊரில் ஸ்டேடியம் கட்டி, அங்கே ஒரு இலட்சத்து 25 ஆயிரம் பேரைக் கூட்டி, இந்திய - இங்கிலாந்து கிரிக்கெட் மேளா நடத்தினார். பின், உத்தரகாண்டில் 90 இலட்சம் பேரைக் கூட்டி கும்பமேளா என்ற மத விழாவை நடத்தினார். பின் ஐந்து மாநிலங்களில் தேர்தல் மேளா நடத்தினார். அப்போது ஒரு நாளைக்கு இந்தியாவில் 20 ஆயிரம் பேர்தான் கொரோனா நோயாளிகளாக இருந்தார்கள். இந்தக் கூத்துக்களுக்குப் பின்னர் இந்தியாவில் இப்போது அது ஒரு நாளைக்கு நான்கு இலட்சத்தைத் தாண்டி விட்டது கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை. இறப்பும் கூடி விட்டது.

அதுபோல் நம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இப்போது குட்டி மோடி ஆகி விட்டார். கோட்டாபய ராஜபக்ஷ, நரேந்திர மோடியின் பெரிய தம்பி என்றால், கோட்டாவின் சிஷ்ய பிள்ளை கெஸ்பாவையின் காமினி லொக்குகே சின்னத் தம்பி ஆகியுள்ளார்” - என்றார். (இ)

## சுகாதார தொண்டர் நியமனம் குறித்து அமைச்சரவையில் டக்ளஸ் யோசனை

### ஜனாதிபதியும் ஏற்றுக்கொண்டாரென தகவல்

கொழும்பு, மே 11

வடக்கு மாகாண சபையினால் உறுதிப்படுத்தப்படுகின்ற சுகாதார தொணடர்களுக்கு மாத்திரமே நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த தெரிவு சேவை மூப்பு அடிப்படையில் அமையும் எனவும் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது, குறித்த விடயம் தொடர்பாக ஜனாதிபதியுடன் விரிவாக ஆராயப்பட்ட நிலையில், தன்னுடைய நியாயங்களை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, மேற்குறிப்பிட்டவாறு நியமனங்களை வழங்க தீர்மானித்துள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தினை சேர்ந்த சுகாதாரத் தொண்டரர்கள் நிரந்தர நியமனம் இன்றிப் பல வருடங்களாக கடமையாற்றி வருகின்றனர்.

இவர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக அமைச்சரவை கூட்டங்களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வந்த நிலையில், ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு திட்டத்தின் ஊடாக நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கல்வி tv CHANNEL-1**

**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
11.05.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், சித்திரை 28

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# மொழியுரிமைக்காக போராடுதல் என்றால் என்ன?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், அரசமைப்பு மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள இரு மொழிக் கொள்கையை, ஆகக் குறைந்தது பாராளுமன்றத்திலேனும் அமுல் படுத்துமாறு கோரிக்கை விடுத்திருக்கின்றார். இந்த உரிமைமீறல் தொடர்பில் தாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறாரெனவும் ஆனால், இது பாராளுமன்றத்தில் கவனிக்கப்படுவதில்லையென்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

சுமந்திரனின் கோரிக்கை நியாயமானது. ஆனால், கடந்த ஆட்சிக் காலத்தில் இடைக்கால அறிக்கை தமிழ் மொழியில் வழங்கப்படவில்லையென்று சில பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியபோது, சுமந்திரன் அமைதியாக இருந்தமையும் இந்த இடத்தில் நினைவு வருகின்றது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற 13ஆவது திருத்தச்சட்டமே, தமிழ் மொழிக்கான சம அந்தஸ்தை உறுதிப்படுத்தியது. தமிழும் உத்தியோகபூர்வ மொழியென்னும் நிலைமை உருவாகியது. ஆனால், 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் இலங்கையை மாறிமாறி ஆட்சிசெய்த அரசாங்கங்கள் எவையுமே முயற்சிக்கவில்லை. அரசாங்கங்கள் அப்படியிருந்ததில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

ஏனெனில், சிங்கள தேசியவாத கருத்துநிலையின் ஆதிக்கத்திற்குள் இருக்கும் அரசாங்கங்கள் இதில் தயங்கியதில், மறுத்ததில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஆனால், எந்த தமிழ் மக்களுக்காக இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதோ, 13ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப் பட்டதோ, மாகாண சபை முறைமை அறிமுகமானதோ- அதனை முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்னும் கரிசனை, ஈடுபாடு, விசுவாசம் தமிழ் கட்சிகளிடம் இருந்திருக்கவில்லை. இப்போதும் இல்லை என்பதுதான் துரதிர்ஷ்டவசமான நிலைமை.

மொழிக் கொள்கைக்காக போராடுதல் என்பதும், மாகாண சபை முறைமையை உச்சளவில் பாதுகாப்பதற்காக போராடுவதென்பதும் ஒன்றுதான், வேறுவேறல்ல. மாகாண சபை முறைமையை பலப்படுத்துவதில் தமிழ் தரப்புக்களால் வெற்றிபெற முடிந்தால், மொழிக்கான சம உரிமையும் உறுதிப்படுத்தப்படும். சுமந்திரன் பாராளுமன்றம் தொடர்பில் பேசுகின்றார் ஆனால், சாதாரண மக்கள் தங்களுக்கான ஆவணங்களை தமிழ் மொழியில் பெற முடிகின்றதா? ஒவ்வொரு நாளும் சாதாரணமாக தமிழர்களின் மொழியுரிமை வீதிகளில் மீறப்படுகின்றது. ஆனால், இதுதொடர்பில் எவருமே பேசியதில்லையே!

போக்குவரத்து பொலிஸாரால் தண்டனைக்குள்ளாகும் ஒவ்வொரு தமிழருக்கும் சிங்களத்தில்தான் தண்டனை பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன. அதில் என்ன எழுதப்பட்டிருக்கின்றதென்று

தொண்ணூறு விகிதமான தமிழர்களுக்கு தெரியாது. தினமும் இந்த உரிமை மீறல் அனுமதிக்கப்படுகின்றது. இதுபற்றி கேள்வி கேட்கவேண்டுமென்று எண்ணும் சாதாரண தமிழ் குடிமகன், கேட்டால் மேலதிகமாகவும் ஏதாவது எழுதிவிடுவார்களோ என்னும் அச்சத்தில், தனது கண்ணுக்கு முன்னாலேயே தனது மொழி புறக்கணிக்கப்படுவதை சாதாரணமாக ஏற்றுக்கொண்டு செல்கின்றான். தமிழ்த் தேசியவாதிகள் என்போரும் இதனை தட்டிக் கேட்கவில்லை. தமிழ்த் தேசிய சட்டவாதிகள் இதனை நீதிமன்றத்தில் கேள்விக்குள்ளாக்கவில்லை. இதனை சட்டரீதியில் எவரும் கேள்விக்குள்ளாக்க முயற்சிக்கவில்லை. அனைவருமே கண்டும் காணாமல் செல்கின்றனர்.

எனவே, மொழியுரிமையென்பது, வெறுமனே பாராளுமன்றத்தில் மட்டும் மதிக்கப்படும் விடயமல்ல. வடக்கு - கிழக்கில் வாழும் எந்தவொரு தமிழ் குடிமகனுக்கும் அவனது மொழியில் தனது கருமங்களை கையாளக் கூடிய நிலைமையிருக்கவேண்டும். அவ்வாறிருந்தால்தான், மொழியுரிமை மதிக்கப்படுவதாக பொருள் கொள்ளலாம். ஆனால் அது சும்மா வந்துவிடாது.

# 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்'

- அலசுவது **இராஜதந்திரி** -

இலங்கை அரசு யாழ்ப்பாண மாநகர சபையின் செயல்பாடுகளை சந்தேகக்கண்கொண்டு பார்ப்பதோடு அந்நடவடிக்கைகளை பயங்கரவாதமாகவும் சித்தரிக்க முயற்சிக்கின்றது என்று யாழ்ப்பாண மேயர் வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாநகர பணியாளர்கள் சிலர் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் அண்மையில் விசாரணைக்குட்படுத்தப்பட்டது தொடர்பாகவே யாழ்ப்பாண மேயர் வி.மணிவண்ணன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

2009ஆம் ஆண்டு மூன்று தசாப்தகால யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் வடக்கு-கிழக்கு பிரதேசங்களை முழு அளவில் ஜனநாயக மயப்படுத்த வேண்டிய தேவை பெரிதும் காணப்படுகின்ற நிலையிலேயே போரினால் தளர்வடைந்திருந்த நிறுவனங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் விதத்தில் அரச தரப்பு நடவடிக்கைகள் இடம்பெறுவதையே யாழ்பாண மாநகர மேயர் மணிவண்ணன் கூறியிருப்பது எடுத்துகாட்டுவதாக இருக்கின்றது.

யாழ்ப்பாண மேயர் கூறியிருப்பதை பார்க்கும்போது அரச தரப்பின் சந்தேகப்பார்வை வடக்கே ஒரு ஜனநாயக ரீதியாக இயங்கும் நிறுவனம் மீதே காணப்படும்போது யாழ்ப்பாணத்தில் தனிநபர்கள் எவ்வளவு தூரம் சந்தேகக்கண்கொண்டு பார்க்கப்படுவார்கள் என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

**கொலையுண்ட மேயர்கள்**

வடக்கே தீவிரவாத போராட்டம் யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பா சுட்டுக்கொல்லப்பட்டதிலிருந்தே ஆரம்பமாகியிருந்தது. இதன்பின்னர் யாழ்ப்பாணத்தின் முதல் பெண் மேயர் சரோஜினி யோகேஸ்வரன் உட்பட சுமார் மூன்று மேயர்கள் வரை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

இதுதவிர யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய ஏராளமான தமிழ் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள்கூட ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர். அத்தோடு அரசாங்க அதிபர்கள், பாடசாலை அதிபர்கள், கிராம சேவை உத்தியோகஸ்தர்கள் என எண்ணிலடங்காதவர்கள், தமிழீழ விடுதலைப் புலிகளால் மட்டுமல்ல. ஏனைய ஆயுதப்போராட்ட குழுவினராலும் சுட்டுக்கொல்லப்பட்டமையே காணமுடிந்திருந்தது. எனவே தற்போது யுத்தம் முடிவுக்கு வந்த நிலையில் பாராளுமன்ற தெரிவுகளாக இருக்கலாம். மாகாணசபை தேர்தல்களாக இருக்கலாம். உள்ளூராட்சி சபைகளுக்குரிய தேர்தல்களாக இருக்கலாம். வடக்கு-கிழக்கு மககள் ஆர்வத்துடன் அவற்றில் பங்குபற்றி ஜனநாயக ரீதியான நடைமுறைகளில் தமக்கிருக்கின்ற ஆர்வத்தை வெளியிட்டிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில் அரச தரப்பினர் ஜனநாயக நடைமுறைகளைப்பின்பற்றுகின்ற நிறுவனங்கள் மற்றும் அதன் பிரதிநிதிகளை சாதகமான முறையில் அணுகி ஜனநாயக நடைமுறைகளைப் பலப்படுத்த வேண்டுமே தவிர, எதனையும் சந்தேகக்கண்கொண்டு பார்க்கும் பட்சத்தில் கொடிய யுத்தத்தின்பின்னர் ஜனநாயக நடைமுறைகளில் கூடுதல் நம்பிக்கையை வைக்கும் மக்களின் எதிர்பார்ப்புகளை தவிடு பொடியாக்குவதாக இருக்குமென்றே கருதமுடியும்.

யாழ்ப்பாண மாநகர சபை இலங்கையில் ஒரு முதல்தர மாகாணசபையாக யுத்தத்துக்கு முன்னரான காலப்பகுதியில் விளங்கியிருந்தது. ஆனால் யுத்தம் முடிவடைந்ததும் யாழ்ப்பாணத்தில் தற்போது இயங்குகின்ற ஒரு முன்னணி ஜனநாயக நிறுவனமாக யாழ்ப்பாண மாநகரசபை விளங்குகின்றது.

**யாழ்.மாநகர பாதுகாப்பு**

யுத்தத்துக்குப்பின்னரான காலப்பகுதியில் யாழ்ப்பாண பிரதேசத்துக்குள் வருவோரது எண்ணிக்கை பெருமளவு அதிகரித்துள்ளது. அத்துடன் வாகனங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. உள்ளூர் வாசிகள் மட்டுமல்ல. வெளிநாடுகளிலிருந்து யாழ்ப்பாணத்துக்குள் வருவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

இதன்காரணமாக கொழும்பில் காணப்படுவதைப்போல நகர பாதுகாப்புப்பிரிவொன்று யாழ்ப்பாணத்திலும் செயல்படுத்தப்படவேண்டியது அவசியமானதாகின்றது.

சில மாதங்களுக்கு முன்னர் இந்த யாழ்ப்பாண நகர பாதுகாப்புப்பிரிவினரின் சீருடை தமிழீழ விடுதலைப்புலிகள் கொண்டிருந்த பொலிஸ் பிரிவின் நீல நிறத்திலான சீருடையை ஒத்திருந்ததெனத் தெரிவித்தே யாழ்ப்பாண மேயர் வி.மணிவண்ணன் புலனாய்வுத் துறையினரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தார். தற்போது யாழ்ப்பாண மாநகர சபையினால் உருவாக்கப்பட்டு நீல நிறத்திலான சீருடையணிந்த பாதுகாப்புப்பிரிவினர் மேலதிக புலன் விசாரணைகளுக்காக கொழும்பின் நான்காம் மாடிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

**பயப்பீதி கொண்ட சூழல்**

யாழ்ப்பாணத்தில் அசாதாரண நிலைமைகள் தோற்றமடையும முன்னர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் நான்காம் மாடிக்கு அடிக்கடி சந்தேகத்தின் பேரில் யாழ்ப்பாண இளைஞர்கள் கொண்டு செல்லப்பட்டிருந்தனர்.

தற்போது மீளவும் முன்பிருந்து பயப்பீதி கொண்ட சூழல்கள் மீண்டும் தோற்றம் பெறுவது போலவே யாழ்.மாநகர பாதுகாப்பு பிரிவினர் புலனாய்வுப்பிரிவினரின் நான்காம் மாடிக்கு அழைக்கப்பட்டுள்ள விடயம் காணப்படுகின்றது.

இந்த நடவடிக்கையை நோக்கும் போது 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' போல அரசு நடந்து கொள்கின்றதோ என்றே எண்ணத்தோன்றுகின்றது.

எனவே இதுவிடயத்தில் அரசதரப்பினர் மக்களின் நம்பிக்கையை முன்னெடுக்கும் நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டுமே தவிர யாழ் மாநகர மேயர் வி.மணிவண்ணன் குறிப்பிட்டது போல ஜனநாயக நடைமுறைகளில் நம்பிக்கை வைத்துள்ள மக்களை அச்சுறுத்தல்களுக்குள்ளாக்கிவிடுவதை தவிர்க்க வேண்டியதே இன்றியமையாததாகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
வாகனம் வாங்கும் திட்டம் நிறைவேறும். ஆதாயம் கூடும். பயணங்களின் போது எச்சரிக்கை தேவை. சிக்கல்கள் தீரும். சுபச்செலவு உண்டு. முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

**இடபம்**
செல்வ நிலை உயரும். முயற்சியில் வெற்றி அடைவீர்கள். மந்த நிலை மாறும். உற்சாகம் அதிகரிக்கும். பெருமை கூடும். நண்பர்கள் நம்பிக்கைக்குரிய விதத்தில் நடந்து கொள்வர்.

**மிதுனம்**
இளைஞர்கள் எதிர்பார்த்த உயர்வு நிலையை அடைவர். உற்சாகமாக காணப்படுவீர்கள். செயல்களில் வெற்றி கிடைக்கும். வெளிநாட்டுத் தொடர்பு அனுகூலம் தரும். உழைப்பு அதிகமாகும்.

**கடகம்**
பணியாளர்கள் எதிர்பாலினத்தாரால் நன்மை பெறுவீர்கள். பொதுநல சேவையில் ஆர்வம் அதிகரிக்கும். ஏக்கம் ஒன்று தீரும். வாட்டம் தீரும். வாழ்க்கை முறையில் சிக்கல் தீர்ந்து ஒழுங்காகும்.

**சிம்மம்**
மன நிறைவை அனுபவிப்பீர்கள். உங்களுக்கு ஆதரவுகள் அதிகரிக்கும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் மகிழ்ச்சி அடைவீர்கள். புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும். அடிபடாமல் கவனமாக இருங்கள்.

**கன்னி**
பணிவு வரவேண்டும். யாரிடமும் கவனமாகப் பழகுவது நல்லது. நல்லவர்போல் நடித்துத் தீங்கு செய்பவர்களிடம் கவனம் தேவை. அரசாங்கம் மூலம் நன்மை அடைவீர்கள். குழந்தைகள் முன்னேறுவர்.

**துலாம்**
உடல்நலனில் கவனம் தேவைப்படும். பயணம் ரத்தாகும். உயர் நிலையை அடைவதற்கான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துங்கள். கூடுதல் வருமானங்கள் உண்டு. வெற்றிகரமான நாள்.

**விருட்சிகம்**
திட்டமிட்ட செயல்களை செய்து முடிப்பீர்கள். அமைதி திரும்பும். பெண்கள் வழிபாட்டை மேற்கொண்டு நிம்மதி காண்பீர்கள். பயம் ஒன்று நீங்கும். குழந்தைகளின் வளர்ச்சி கூடுதலாக இருக்கும்.

**தனுசு**
உங்கள் கீழ் பணிபுரிவோர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். உடனிருப்பவர்களால் சிறு சிறு தொல்லைகள் ஏற்படக்கூடும். பிறருக்காகக்கையெழுத்திடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**மகரம்**
பிரிந்து சென்றவர்களை பற்றி கவலை கொள்ளாதீர்கள். அலுவலகத்தில் கூடுதல் பணியை கவனிக்க வேண்டி இருக்கும். உறவினர்களுடன் இருந்த பிரச்னைகளைப் பேசித் தீர்ப்பீர்கள்.

**கும்பம்**
புதிய முயற்சிகள் காலதாமதமின்றி இன்று நன்றாக முடியும். விவாதத்தை தவிர்க்க வேண்டும். வீண் அலைச்சல் உண்டு. வாரிசுகளின் எதிர்கால நலன் கருதி சேமிக்க ஆரம்பிப்பீர்கள்.

**மீனம்**
அரசியல் ஈடுபாட்டால் நன்மை ஏற்படும். நட்பு வட்டம் விரியும். விருந்தினர்கள் வருகையினால் சிறு விவாதம் ஏற்படும். எதிர்கால வாழ்விற்கு அடித்தளம் அமைக்கும் நிகழ்வு நடைபெறும்.

# எதிர்க்கட்சித் தலைவராக எடப்பாடி தெரிவு! அதிருப்தியில் வெளியேறிய ஓ.பி.எஸ். அணி!!

## அ.தி.மு.க. எம்.எல்.ஏ.கள் கூட்டத்தில் மீண்டும் குழப்பம்

சென்னை, மே 11

**தமிழக சட்டசபை எதிர்க்கட்சி தலைவராக முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி நேற்று தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஆனால், எடப்பாடி பழனிசாமி தேர்வு செய்யப்பட்டதை ஏற்க மறுத்து அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் கூட்டத்தில் இருந்து முன்னாள் துணை முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் அதிருப்தியில் வெளியேறினார்.**



சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. 65 இடங்களில் வென்றது. இதனால் எதிர்க்கட்சி அந்தஸ்து அ.தி.மு.கவுக்கு கிடைத்துள்ளது.

இதையடுத்து அ.தி.மு.க. சட்டசபை குழுத் தலைவர் அதாவது சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் யார்? என்பதை தீர்மானிக்க முடியாமல் அ.தி.மு.க. அல்லாடியது. அ.தி.மு.கவில் ஓ.பி.எஸ்., ஈ.பி.எஸ். இருவரும் எதிர்க்கட்சித் தலைவர்பதவிக்கு பெரும்போராட்டத்தை நடத்தினர்.

இதனால் அ.தி.மு.க. எம்.எல். ஏக்கள் கூட்டம் நேற்று மீண்டும் கூட்டப்பட்டது. சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் இந்த கூட்டம் 3 மணிநேரத்துக்கும் மேலாக நடைபெற்றது. இதில் அ.தி.மு.கவின் 65 எம்.எல். ஏக்கள் தவிர வேறு யாரும் கலந்து கொள்ளக்கூடாது என உத்தர விடப்பட்டிருந்தது.

அ.தி.மு.கவில் எடப்பாடி பழனிசாமிக்கு அதிக ஆதரவு எம்.எல்.ஏக்கள் இருக்கின்றனர் என்றது அவரின் தரப்பு. ஆனால் வாக்கெடுப்பு நடத்திப் பாருங்கள்... எங்களுக்குதான் அதிக ஆதரவு உள்ளது என சொன்னது ஓ.பி.எஸ். தரப்பு. இந்த நிலையில் தான் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் கூட்டம்பெரும்பரபரப்புக்கு மத்தியில் நேற்று கூட்டப்பட்டது.

இதில் ஓ.பி.எஸ்., ஈ.பி.எஸ். தரப்பு விட்டுக்கொடுக்கவில்லை. இதனால் எந்த முடிவும் எடுக்கப்படாமலேயே 3 மணிநேரமாக கூட்டம் நீடித்தது. ஒருகட்டத்தில் எடப்பாடி பழனிசாமி, எதிர்க் கட்சித் தலைவராக தேர்வு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதில் சீற்றமடைந்த ஓபிஎஸ், அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் கூட்டத்தில் இருந்து பாதியிலேயே வெளியேறினார். கட்சியின் ஒருங்கிணைப்பாளராக உள்ள ஓ.பி.எஸ்-க்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி தராததால் அவரது ஆதரவாளர்கள் குமுறலுடன் உள்ளனர்.

இதனால் மீண்டும் ஒரு பிளவை அ.தி.மு.க. எதிர் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

# 27 வருடங்களாக சிறைவாசம் அனுபவிக்கும் ஏழு பேரையும் விடுதலை செய்ய வேண்டும்

## தமிழக முதலமைச்சரிடம் வைகோ கோரிக்கை

சென்னை, மே 11,

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் 27 ஆண்டுகளுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்து வரும் 7 பேரையும் விடுதலை செய்ய வேண்டும் என மதிமுக பொதுச் செயலாளர்வைகோதமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மதிமுக பொதுச் செயலாளர் வைகோ இது குறித்து நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தவறு செய்யாமலே ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 27 ஆண்டுகளுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்து வருகின்ற ஏழு பேரில், சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகிய மூவரும் மரணதண்டனைகைதிகளாகவே மனதளவில் சித்ரவதை அனுபவித்து வருகின்றனர்.



அதுபோலவே நளினி, ரவிச்சந்தின், ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார் ஆகியோரின் இளமை வாழ்க்கையும் இருண்டு பாழாய்ப் போனது. உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி தனது தீர்ப்பில், எழுவரையும் தமிழக அரசே விடுதலை செய்யலாம் என்று கூறிய பின்னரும், இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் நாடு அரசு அவர்களை விடுதலை செய்யுமாறு உச்சநீதிமன்றத்தின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப ஆளுநருக்குக் கோரிக்கை விடுத்தும், ஆளுநர் அந்தக் கோரிக்கையை குப்பைத் தொட்டியில் போடுவது போல் போட்டுவிட்டார்.

இந்தப் பிரச்னை குறித்து மத்திய அரசிடம் கருத்துக் கேட்க வேண்டிய அவசியமே கிடையாது. ஆனால் மத்திய அரசிடம் கருத்துக் கேட்டதாகவும், மத்திய அரசு அதற்கு தடை போடுவதாகவும் மோசடி நாடகத்தை இதுவரை நடத்தி வந்தனர். ஏழு பேரை விடுதலை செய்ய வேண்டும் என்ற கருத்தை ஏற்கனவே திமுக வலியுறுத்தி வருகிறது.

எனவே தமிழக முதல்வர் ஸ்டாலின் ஏழு பேரையும் விடுதலை செய்து ஆணை பிறப்பித்து கோடானு கோடி தமிழர்களின் உள்ளத்தில் பால்வார்க்கும் செய்தியாக நடவடிக்கை எடுக்குமாறு மதிமுகசார்பில்அன்போடு வேண்டுகிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

# நடைமுறைக்கு வந்தது இரு வார ஊரடங்கு; ஒரு லட்சம் பொலிஸ் பாதுகாப்பு பணியில்!

சென்னை, மே 11

தமிழகத்தில் கொரோனா பரவல் அதிகரித்துள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்காக நடைமுறைப் படுத்தப் படும் இரண்டு வார ஊரடங்கு நேற்று நடைமுறைக்கு வந்துள்ளது. எதிர்வரும் 24ஆம் திகதி வரை 2 வாரங்களுக்கு இந்த ஊரடங்கு கடை பிடிக்கப்படும். முழு ஊரடங்கு காரணமாக நேற்று பஸ், கார், ஓட்டோக்கள் ஓடவில்லை. இதனால் சாலைகள் பரபரப்பு இன்றி வெறிச்சோடி காணப்பட்டது.

மாவட்டங்களுக்கு இடையேயான பொது போக்குவரத்து முழுமையாக நிறுத்தப்பட்டது. அரசு மற்றும் தனியார் பேருந்துகள், வாடகை கார்கள், ஓட்டோக்கள் ஆகியவை முற்றிலுமாக நிறுத்தப்பட்டு இருந்தது. அதேநேரத்தில் அத்தியாவசிய தேவைகளுக்கான வாகனங்கள் வழக்கம் போல் இயங்கின. முழு ஊரடங்கு காரணமாக சென்னை உள்பட அனைத்து மாவட்டங்களிலும் பொதுமக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டு இருந்தது.

முழு ஊரடங்கில் தடையை மீறி தேவையின்றி வெளியில் சுற்றுபவர்களை பிடிக்க பொலிஸார் ரோந்து பணியில் ஈடுபட்டு உள்ளனர்.

சென்னையில் 200 இடங்களில் வாகன சோதனை நடத்தப்படுகிறது. சென்னையில் 10 ஆயிரம் பொலிஸ் தமிழகம் முழுவதும் ஒரு லட்சம் காவலர்களும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## விதிகளை மீறி கிரிக்கெட்
# ‘90ஸ் கிட்ஸ்’, ‘2கே கிட்ஸ்’ இளைஞர்களுக்கு தனிமை

யாழ்ப்பாணம், மே 11

கொரோனா விதிமுறைகளைமீறி சண்டியர் கிண்ண இருபது- 20 கிரிக்கெட் போட்டி நடத்திய ‘90ஸ் கிட்ஸ்’, ‘2கே கிட்ஸ்’ வாலிபர்கள் 25 பேர் கூட்டமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறையை சேர்ந்த இளைஞர்கள் லோட்டஸ் மைதானத்தில் ‘சண்டியர்கள் 2021’ என்ற பெயரில் இருபது - 20 சுற்றுப் போட்டியை நடத்தினர். தற்போது பொதுமக்கள் கூடும் நிகழ்வுகளிற்கும், விளையாட்டு நிகழ்வுகளுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனை மீறி, ஊர்காவற்துறை இளைஞர்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்தப் போட்டி நடத்தப்பட்டது.

இதில், ’90ஸ் கிட்ஸ்’ ஓர் அணியாகவும், ‘2கே கிட்ஸ்’ மற்றோர் அணியாகவும் விளையாடினர். இந்நிலையிலேயே விதிமுறைகளை மீறி ஒன்றுகூடியமைக்காக ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர் 25 இளைஞர்களை கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியுள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர், கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கிரிக்கெட் பயிற்சியில் ஈடுபட்ட 30 பேர் தனிமைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# வட மாகாண கிராம அபிவிருத்தி பணிப்பாளராக சசீலன் நியமனம்

யாழ்ப்பாணம், மே 11

வட மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளராக ராஜேந்திரா சசீலன் நியமிக்கப்பட்டமைக்கான கடிதம் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸால் நேற்று வழங்கிவைக்கப்பட்டது.

இதன்போது, கிராம அபிவிருத்தியை மேம்படுத்துவது தொடர்பானவிடயங்கள்கலந்துரையாடப்பட்டன. அத்துடன், மக்களுக்கான சேவையில் அவர்களுக்கு தேவையான விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்த வேண்டும் என்றும், இந்த நிகழ்ச்சித் திட்டங்களில் இளையோரின் பங்களிப்பை எதிர்காலத்தில் அதிகரிப்பது குறித்தும் பேசப்பட்டது. (ஐ-3)

# யாழில் 10,135 குடும்பங்களுக்கு நிரந்தர காணிகள் இல்லை!
## வெளிமாவட்டங்களில் வழங்க ஏற்பாடு



மானிப்பாய், மே 11

யாழ். மாவட்டத்தில் 10, 135 குடும்பங்கள் காணியற்ற நிலையில் வாழ்கின்றனர். இவ்வாறு காணியற்று வாழும் குடும்பங்களுக்கு மருதங்கேணி பிரதேசத்திலோ அன்றி வேறு மாவட்டங்களிலோ காணி வழங்க வேண்டிய கட்டாய சூழல் ஏற்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ். முரளிதரன் தெரிவித்துள்ளார்.

பிரதேச செயலாளர்கள் முறையான சிபாரிசு வழங்கும் பட்சத்தில் பளை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வகையில் ஒருவருக்கு 30 முதல் 40 பேர்ச் (3 முதல் 4 பரப்பு) காணி வழங்க முடியும் என்று காணி சீர்திருத்த ஆணைக் குழுவின் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டது.

காணியற்ற குடும்பங்களுக்கான காணி தேவையை விரைவாக வரையறுப்பதன் மூலம் வீடற்றவர்களின் பிரச்னையை விரைவாக தீர்க்க முடியும். இதற்கு ஒருங்கிணைந்த அடிப்படையில் காணியுடன் தொடர்புடைய அனைவரும் விரைந்த செயல்பாட்டை முன்வைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)





# வடக்கு ஆளுநர் அலுவலகம் முன்பாக சுகாதார தொண்டர்கள் கவனவீர்ப்பு!

யாழ்ப்பாணம், மே 11

**வடக்கு மாகாணத்தில் தற்காலிக சுகாதார தொண்டர்களாகப் பணியாற்றிய 970 சுகாதாரத் தொண்டர்களுக்கும் நிரந்தர நியமனம் தர வேண்டும் என்று கோரி வட மாகாண ஆளுநர் செயலகம் முன் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.**

இந்தப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் கூறுகையில்,

யுத்த காலத்தில் சேவையாற்றிய 840 பேர் சுகாதார தொண்டர்களாக வடக்கு மாகாண சபையினால் உள்வாங்கப்பட்டனர்.

பின்னர், வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே காலத்தில் 130 பேர் சுகாதார தொண்டர்கள் தற்காலிகமாக கடமையாற்றிய நிலையில் அவர்களையும் இணைத்து 970 பேர் சுகாதாரத் தொண்டர்களாக பணி நிரந்தர நியமனம் கேட்டு போராடி வருகிறோம்.

சுகாதார தொண்டர்களுக்கான நேர்முகத் தேர்வு இரு தடவைகள் இடம்பெற்ற நிலையில், அவற்றில் ஊழல்கள் இடம்பெற்றன என்று நாம் அறிகின்றோம்.

இறுதி யுத்தத்தின் போது கடமையாற்றிய சுகாதார தொண்டர்கள் இறுதியாக இடம்பெற்ற நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படவில்லை. ஆகவே, வட மாகாணத்தில் சுகாதாரத் தொண்டர்களாக நிரந்தர நியமனம் கேட்டு விண்ணப்பித்த 970 பேருக்கும் குறித்த நியமனத்தை பாகுபாடின்றி தரவேண்டும் - என்று கூறினர். (ஐ)

# சந்திரசேகர சர்மாவின் மறைவுக்கு இந்து குருமார் அமைப்பு இரங்கல்!

கொழும்பு, மே 11



கீரிமலை பிரம்ம ஸ்ரீ கார்த்திகேசு சர்மா சந்திரசேகர சர் மாவின் மறைவுக்கு இந்துக் குருமார் அமைப்பு இரங்கல் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

கீரிமலையை பிறப்பிடமாவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ கார்த்திகேசு சர்மா சந்திரசேகர சர்மாவின் இறைபத செய்தி அறிந்து மிகவும் கவலை அடைந்தோம்.

கடந்த ஏழு வருடங்களாக எமது இந்துக் குருமார் அமைப்பின் கௌரவ செயலாளராக பதவி வகித்து வந்தார். அனைவராலும் கீரிமலை சந்திரண்ணா, கீரிமலை சந்திரன் ஐயா என அறியப்பட்டவர் - அழைக்கப்பட்டவர்.

எமது இந்துக் குருமார் அமைப்பின் சமய சமூகம் சார்ந்த பணிகளுக்கு முன்னுரிமை அளித்து செயல்பட்டதுடன் எம் அனைவருக்கும் உற்சாகம் தரும் வண்ணம் முன்னுதாரணமாக செயல்பட்டவர். சிறப்பாக மாணவர்களின் கல்விக்கு இயன்றளவில் உதவியுடன் ஊக்குவிக்கும் வழங்கும் செயல்பாடுகளில் ஈடுபட்டு, இருந்தார். யாழ்ப்பாணம் சர்வ தேச இந்துக் குருமார் ஒன்றியத் தின்மூத்த உறுப்பினராகவும் செயலாளராகவும் இருந்து பல ஆக்கபூர்வமான பணிகளை புரிந்துள்ளார். தொடந்தும் நாம் அனைவரும் அவருடைய நற்பணிகளை முன்னெடுப்போம்.

அவரது திடீர் இறைபத செய்தி மிகவும் கவலையை தந்துள்ளது. அமரரின் ஆத்ம சிவப்பிராப்திக்கு அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்கின்றோம் -என்றுள்ளது.ஐ)

# பருத்தித்துறை நகர சபை முடக்கம்!

வடமராட்சி, மே 11

பருத்தித்துறை நகர சபை உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரொனா தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து நேற்று திங்கட்கிழமை முதல் நகர சபை அலுவலகம் முடக்கப்பட்டுள்ளது.

கொரொனா தொற்று நோய் சந்தேகத்தின்பேரில் அங்கு பணி புரிந்து வரும் உத்தியோகத்தர் ஒருவர் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

பரிசோதனை முடிவில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அவருக்கு கொரொனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து பருத்தித்துறை நகர சபை அலுவலகம் நேற்று முடக்கப்பட்டதுடன் உத்தியோகத்தர்களும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ஐ -2)

# நயினாதீவு ஆலயத்துக்கு செல்ல தடை!

யாழ்ப்பாணம், மே 11

கொரோனா தொற்று தீவிர அச்சம் காரணமாக நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு பக்தர்கள் பிரவேசிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அதிகாரிகளின் பணிப்புரைக்கு அமைய ஆலய வளாகத்தினுள் ஆலய அறங்காவலர்கள், குருமார்கள் மற்றும் ஆலய பணியாளர்கள் தவிர்ந்த ஏனையோர் பிரவேசிக்க தற்காலிகமாக அனுமதிக்கப்படவில்லை என்று ஆலய நிர்வாகத் தினர் அறிவித்துள்ளனர்.

அத்துடன், ஆலயத்தில் இடம்பெற்று வந்த அபிஷேகங்கள் மற்றும் தினசரி அன்னதானம் என்பவையும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை வீட்டிலிருந்தே நினைவுகூருங்கள்!

## மீறி ஒன்றுகூடினால் கூண்டோடு கைதாவீர்கள் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அறிவிப்பு



கொழும்பு,மே11

**கொரோனா பரவல் அதிகரித்துள்ள நிலையில் எதிர்வரும் மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனைவரும் வீட்டிலிருந்தே நினைவு கூருங்கள். நினைவேந்தலை கடைப்பிடிக்க முள்ளிவாய்க்கால் மண்ணில் மக்கள் அரசியல் வாதிகள் என்று எவர் ஒன்றுகூடினாலும் அனைவரும் கூண்டோடு கைதா வார்கள் என்று இராணுவத் தள பதியும் கோவிட் செயலணி தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.**

கொரோனா பரவுவதை கட்டப்படுத்து வதற்காக பல்வேறு விடயங்கள் அறிவிக் கப்பட்டுள்ளன. கடந்த 3 ஆம் திகதியிலிருந்து அரச மற்றும் தனியார் நிகழ்வுகள் மற்றும் நயினாதீவில் இடம்பெறவிருந்த வெசாக் நிகழ்வுகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் கொரோனா கட்டுப்பாட்டுக்காக விசேட வர்த்தமானியும் வெளியிடப்பட் டுள்ளது.

நினைவுகூரலுக்காக மக்கள் முள்ளி வாய்க் காலில் ஒன்றுகூடினால் அரசியல்வாதி கள் மக்கள் என்ற வேறுபாடு இல்லாது கைது செய்யப்படுவார்கள்.

இறந்தவர்களை நினைவு கூரும் உரிமையை நாம் மறுக்கவில்லை. வீடு களில் தனித்து அதனைச் செய்வதில் எமக்கு ஆட்சேபனை யில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ - 3)



## வற்றாப்பளை கண்ணகைக்கு பொங்கல் திருவிழா ஆரம்பம்!

முல்லைத்தீவு, மே 11

வரலாற்று பிரசித்தி பெற்ற முல்லைத்தீவு - வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் திருவிழா வில் திங்கட் கிழமையான நேற்று பாக்குதெண்டல்இடம்பெற்றது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக, கோவில் நிர்வாகத் தினர் மாத்திரம் மட்டுப்படுத் தப்பட்ட அளவில் கலந்து கொண்டு, சுகாதார நடைமுறை களை இறுக்கமாக பேணி திரு விழா ஆரம்பமானது.

முள்ளியவளை காட்டா விநாயகர் கோவிலில் இருந்து, நேற்று அதிகாலை 2 மணிக்கு, வழிபாடுகள்இடம்பெற்று, அதைத் தொடர்ந்து, வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவிலு டன் நீண்ட தொடர்பை பேணி வந்த குடியானவர்களுக்கு மரபு வழியாக அறிவிப்பதற்காக அவர் களின் வீடுகளுக்கு சென்று பாக் குத்தெண்டல் இடம்பெற்றது.

அடுத்த வாரம் திங்கட்கிழமை 17ஆம் திகதி முல்லைத்தீவு தீர்த் தக் கரையில் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

பொங்கல் திருவிழா 25ஆம் திகதி திங்கட்கிழமை நடை பெறும். இம்முறை மிக இறுக்க மான நடைமுறைகளுடன் பொங்கல் நிகழ்வுக் கான அனு மதி வழங்கப்படுவது என்றும் பக்தர்கள் பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளமையும் குறிப் பிடத்தக்கது. (ஐ)



## தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கல்!

கிளிநொச்சி, மே 11

கிளிநொச்சியில் தனிமைப்படுத்தப்பட்ட 16 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

சோரன்பற்று கிராமத்தை சேர்ந்த குடும்பங்களுக்கே இவ்வாறு உலர் உணவுப் பொருட்கள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதர னின் ஏற்பாட்டிலேயே இந்த உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

## முகக்கவசங்களை மறந்த 9 பேருக்கு எதிராக வழக்கு!

முல்லைத்தீவு, மே 11

முள்ளியவளை, தண்ணீரூற்று நீராவிப்பிட்டி பகுதிகளில், முகக் கவசம் அணியாத 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று முள்ளிய வளை பொலிஸார் தெரிவித்தனர்.

முள்ளியவளை பொலிஸாரும் பொதுச்சுகாதார பரிசோதகர்களும் இணைந்து மேற்கொண்ட பரிசோதனை நடவடிக்கையின் போது, இரு சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட ஒன்பது பேர் முகக்கவசம் அணியாமல் சென்றுள்ளார்கள். இவர்களைப் பிடித்து பொலிஸாரிடம் பொது சுகாதார பரிசோதகர்கள் ஒப்படைத்தனர்.

கைதுசெய்யப்பட்ட அனைவரும் எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எதிரான வழக்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில், விசாரணைக்கு வரும் என்று தெரிய வருகின்றது. (ஐ)



## வவுனியா தொழில்நுட்ப கல்லூரி புதிய விண்ணப்பங்கள் கோரல்!

வவுனியா, மே 11

வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியில் 2021 ஆம் ஆண் டுக்கான டிப்ளோமா (NVQ Level 5) கற்கைநெறிகள் ஆரம் பிக்கப்படவுள்ளது. இதற்காக கணனி டிப்ளோமா, ஆங்கில டிப் ளோமா, கணக்கியல் டிப்ளோமா, குடிசார் எந்திரவியல் டிப்ளமோ ஆகிய கற்கைநெறிகளுக்கே விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கணனி கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவர்கள் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தகவல் தொழில்நுடபாடத்தில் திறமைச்சித்தி 'சி' அல்லது சாதாரண சித்தி 'எஸ்' உள்ளடங் கலாக 3 பாடங்களில் சித்தி அல்லது கணனி தொடர்பான பாடநெறியில் NVQ 3 / NVQ 4 சான்றிதழ் பெற்றிருத்தல் வேண் டும்.

ஆங்கில டிப்ளோமாவுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 3 படங்களில் சித்தியுடன் General English யில் S தர சித்தி அல்லது NCE/NCPE/ACS என்பவற்றில் ஏதாவது ஒன்றில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

தேசிய கணக்கியல் டிப்ளே மாவுக்கு விண்ப்பிப்போர், க. பொ.த உயர்தரப் பரீட்சையில் வர்த்தகத் துறையில் 3 பாடங் களில் சித்தியுடன் க.பொ.த சாதா ரணதர பரீட்சையில் ஆங்கி லத்தில் சித்தி அல்லது NCAT – NVQ 4 சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குடிசார் எந்திரவியல் டிப்ளோ மோவுக்கு விண்ணப்பிப்போர், உரிய துறையில் தொழிலில் ஈடு பட்டுள்ளவர்களுக்கு மட்டுப்படுத் தப்பட்டுள்ளது. க.பொ.த சாதார ணதர பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் போதனா மொழி, கணிதம், விஞ் ஞானம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மற்றும் உரிய துறையில் NVQ 4 சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்ப படிவங் களை தொழில்நுட்பக்கல்லூரியில் பெற்றுக் கொள்ள முடியும். (ஐ)



## சங்குப்பிட்டியில் மீண்டும் பிள்ளையார் சிலை பிரதிஷ்டை

பூநகரி, மே 11

சங்குப்பிட்டியில் உருத்திர சேனை அமைப்பால் பிள்ளை யார் சிலை ஒன்று கடந்த பெப்ர வரி மாதம் பிரதிஷ்டை செய்யப் பட்டது. இந்தச் சிலை பின்னர் அந்த இடத்திலிருந்து காணாமல் போயிருந்தது.

இந்நிலையில், நேற்று முதல் அதே இடத்தில் பிள்ளையார் சிலைஒன்று நிறுவப்பட்டுள்ளது. இந்தச்சிலையை யார் நிறுவினார் கள் என்று பகிரங்கப்படுத்தப் படவில்லை. எனினும், முன்னர் இருந்த சிலையை ஒத்தே இந்த சிலையும் உள்ளது என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ)

## கூடுதல் விலையில் உரங்கள்: கட்டுப்படுத்துமாறு கோரிக்கை!

முல்லைத்தீவு, மே 11

முல்லைத்தீவு மாவட்டத் தில், உரங்கள், களை, பூச்சி நாசினிகள் ஆகியவற்றை கூடுதல் விலையில் விற்பதைத் தடுப்பதற்கு, முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் சற்குணநாதன் சுயன்சன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக தொடர்ந்துரைத்த அவர், முல்லைத்தீவு மாவட்டத்தில், தற்போது சிறுபோக நெற்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டு வரும் நிலையில், தனியார் வர்த்தக நிலையங்களில் 4,000 ரூபாய்க்கும் மேல் உரங்கள் விற்கப்படுகின்றன என்றார்.

கடந்த காலங்களில், பொறிக்கப்பட்ட விலையில் இருந்து குறைத்தே களை, பூச்சி நாசினிகள் வழங்கப்பட்டு வந்ததாகத் தெரிவித்த அவர், இந்நிலையில் தற்போது அதிக விலையில் விற்கப்படுவதால் விவசாயிகள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண் டுள்ளனரெனவும் கூறினார்.

எனவே, இது தொடர்பில் மாவட்டச் செயலாளர் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இதனுடன் தொடர்புடைய அதிகாரிகள் தனியார் விற்பனை நிலையங்களுக்குச் சென்று அதிக விலையில் விற்காமல் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## வேகமாக பரவுகின்றது கொரோனா

# மக்களின் உயிர்களைக் காப்பாற்ற களத்தில் இறங்க வேண்டும் அரசு!

### - கடும் எச்சரிக்கையுடன் ரணில் வலியுறுத்து



கொழும்பு, மே 11

**"கொரோனா வைரஸ் வேகமாகப் பரவுவதால் மக்களின் சுகாதாரப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே, அரசு உடனடியாக செயல்பட்டு, பொதுமக்களின் உயிர்களைக் காப்பாற்ற வேண்டும்." - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க அவசர வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளார்.**

இது தொடர்பில் விசேட காணொலியொன்றை அவர் நேற்று வெளியிட்டுள்ளார்.

தற்போதைய நிலவரம் நீடித்தால் ஜூன், ஜூலை மாதங்களில் நாளொன்றுக்கு 100 பேர் வரை உயிரிழக்கும் அவல நிலை ஏற்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இதனால், அமைச்சரவையும், ஜனாதிபதியும் அதிகாரங்களைத் தங்களின் கைகளுக்கு எடுத்துப் பொறுப்புடன் தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்றும், இதற்கான அனுபவம் அமைச்சரவைக்கு இருக்கின்றது எனவும் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு: -

"நாம் இன்று நெருக்கடியான நிலையை எதிர்கொண்டுள்ளோம். சுகாதாரப் பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளது. கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகின்றது. தடுப்பூசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஒட்சிசன் தட்டுப்பாடு இருக்கின்றது. வெண்டிலேட்டர் தட்டுப்பாடு இருக்கின்றது. மருத்துவமனைகளில் கட்டில்களுக்குத் தட்டுப்பாடு இருக்கின்றது. மருத்துவமனைகள் நிறைந்து வழிகின்றன.

நாளுக்கு நாள் இந்தக் கொரோனா வைரஸ் பரவி வருகின்றது. எனவே, நாம் மிகவும் நெருக்கடியாக காலகட்டத்தில் இருக்கின்றோம். எமது மருத்துவர்களின் ஆலோசனைகளின் படி நாம் சரியான தீர்மானங்களை எடுக்காவிடின் நாம் பாரிய நெருக் கடிகளைச் சந்திக்க நேரிடும்.

அதேபோல், வாஷிங்டன் பல்கலைக்கழக அறிக்கையொன்றின்படி, நாளுக்கு நாள் நிலைமை மோசமாகும் என்பதுடன் ஜூன், ஜூலை மாதங்களில் நாளொன்றுக்கு 100 பேர் மரணிக்கும் நிலை ஏற்படும். எனவே, இந்த நெருக் கடியான நிலையில் நாம் அனை வரும் இணைந்து பணியாற்ற வேண்டும்.

இது அரசின் பெயரைத் தக்க வைத்துக் கொள்ளும் போராட்டம் அல்ல. இது அரசியல் போராட்டம் அல்ல. உண்மையில் இது மக்களின் உயிர்களைக் காப்பாற்றும் போராட்டம். அரசை மாற்றுமாறு கோரவில்லை. இந்த நாட்டின் அரசமைப்பின்படி அமைச்சரவைக்கே பொறுப்பு இருக்கின்றது. ஜனாதிபதியும், அமைச்சரவை அமைச்சர்களும் தங்களின் கைகளுக்கு அதிகாரங்களை எடுக்க வேண்டும். தற்போதுள்ள குழுக்கள் தோல்வியடைந்துள்ளன. இவை குறித்து ஏற்கனவே கூறியிருந்தோம்.

எனினும், எதனையும் கண்டுகொள்ளவில்லை. பொதுமக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். அதிகாரங்களை அமைச்சரவையும் ஜனாதிபதியும் பொறுப்பேற்க வேண்டும்.

இந்த வாரமே எதிர்க்கட்சித் தலைவருடன் பேச்சு நடத்துங்கள். அவர்களின் யோசனைகளையும், ஒத்துழைப்புக்களையும் பெற்றுக்கொள்ளுங்கள். அவர்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். உடனடியாகச் செயற்பட வேண்டும். இல்லையெனில் பல உயிர்களை இழக்க நேரிடும். பொதுமக்கள் குறித்து அக்கறை இருக்குமாயின், அமைச்சரவை இதனைப் பொறுப்பேற்க வேண்டும். அவர்களுக்கு இது குறித்து அனுபவம் இருக்கின்றது. இதன்படி நடவடிக்கைகளை எடுக் குமாறு நான் விசேடமாக வேண்டு கோள் முன்வைக்கிறேன்" - என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் கொரோனா வைரஸின் முதலாவது அலை ஏற் பட்டபோது, மருத்துவமனை களைத் தயார்ப்படுத்தி, கட்டில் களையும், வெண்டிலேட்டர் களையும் மேலதிகமாக தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண் டும் என்று கடந்த வருடமே ரணில் விக்கிரமசிங்க, அரசுக்கு ஆலோசனை வழங்கியிருந்தமை இங்கு நினைவூட்டத்தக்கது. (இ)

## தனியார் ஊழியர்களுக்கு ஓய்வூதிய திட்டம் அரசு அதிக கவனம்

கொழும்பு, மே 11

தனியார் துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் வகையில் ஊழியர் சேம நிதியச் சட்டத்தில் திருத்தம் செய்வது குறித்து அரசு அதிக கவனம் செலுத்தியுள்ளது.

இதன் மூலம் அரச ஊழியர்களுக்கு வழங்குவது போன்று மாதாந்தக் கொடுப்பனவாக ஊழியர் சேம நிதியை வழங்குவதற்கு இதன் மூலம் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

எனினும், இந்தத் திட்டம் தற்போது பேச்சு மட்டத்தில் மட்டுமே உள்ளது எனவும், திட்டவட்டமான முடிவு எடுக்கப்படவில்லை எனவும் நிதி அமைச்சின் மேலதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு இந்தத் திட்டத்துக்கு அரசின் பங்களிப்பு குறித்து விவாதிக்கப்பட்டு வருகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனியார் துறையினருக்கு ஓய்வூதியத் திட்டத்தை உருவாக்கும் முன்மொழிவு கடந்த அரசால் 2011ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. எனினும், அதற்கு எதிர்ப்புகள் எழுந்ததையடுத்து கைவிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பல முறை பேச்சுக்கள் நடைபெற்ற போதிலும் இதுவரை எந்தவொரு தீர்மானமும் எட்டப்படவில்லை. (இ)

## சிறைக்குள் ரஞ்சனுக்கு தொலைக்காட்சி வசதி!

கொழும்பு, மே 11

நான்கு வருட கடூழியச் சிறைத்தண்டனையை அனுபவித்து வருகின்ற ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு சிறைச்சாலைக்குள்ளேயே தொலைக்காட்சி வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கள ஊடகமொன்று இந்தத் தகவலை நேற்று வெளியிட்டுள்ளது.

ரஞ்சன் ராமநாயக்க தற்போது அம்பாந்தோட்டை - அங்குனகொல பெலஸ்ஸ சிறையில் உள்ளார்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, ரஞ்சன் ராமநாயக்கவுக்குத் தொலைக்காட்சி வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ள தகவலைத் தெரிவித்துள்ளார்.

இதுதவிர, மின்விசிறி ஒன்றும் அவருக்கு வழங்கப்படவுள்ளது எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

## கிழக்கில் மாவட்டங்களுக்கு இடையே பயணக் கட்டுப்பாடுகளை விதியுங்கள்

### பாதுகாப்புத் தரப்பினருக்கு ஆளுநர் உத்தரவு

திருகோணமலை, மே 11

கிழக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், பாதுகாப்புப் படையினருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கொரோனாவின் மூன்றாம் அலை தொடங்கியது முதல் கிழக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்று பரவல் அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில், உடனடியாக அமுலாகும் வகையில் கிழக்கு மாகாணத்தின் மாவட்டங்களுக்கு இடையே பயணக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்துமாறும் பாதுகாப்புப் படையினருக்கும் ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், மாலை 6 மணிக்குப் பின்னர் மக்கள் நகரங்களுக்குள் பிரவேசிக்காத வகையில் கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் மாலை 6 மணிக்கு மூடுமாறும் ஆளுநர் கோரியுள்ளார்.

அத்தோடு, கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கிழக்கு மாகாண ஆளுநர், பாதுகாப்புப் படையினரை வலியுறுத்தியுள்ளார். (இ)

## நோன்பு பெருநாள் தினத்தில் சகல பள்ளிவாசல்களும் பூட்டு!

### வீடுகளில் தொழுகைகளில் ஈடுபடுமாறு கோரிக்கை

கொழும்பு, மே 11.

இலங்கையில் பரவும் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கருத்தில்கொண்டு நோன்புப் பெருநாள் அன்று பள்ளிவாசல்களை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் அன்றையதினம் தொழுகைகளை வீடுகளில் இருந்து நடத்துமாறும் அந்தத் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொரோனா நிலைமையைக் கருத்தில்கொண்டு பள்ளிவாசல்களில் கூட்டுச் செயல்பாடுகளை நிறுத்த வேண்டும் என்று வக்பு சபை உத்தரவிட்டுள்ளதால் நோன்புப் பெருநாளில் அனைத்துப் பள்ளிவாசல்களையும் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (இ)

## இலங்கைப் பணிபெண்ணொருவர் குவைத்தில் கழுத்தறுத்துக் கொலை!

### நாட்டுக்கு கொண்டுவரப்பட்டது சடலம்

கொழும்பு, மே 11

குவைத்தில் படுகொலை செய்யப்பட்டார் எனக் கூறப்படும் இலங்கைப் பணிப் பெண் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

குறித்த பெண் கடந்த 2019ஆம் ஆண்டு குவைத்துக்குச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஏப்ரல் மாதம் 13ஆம் திகதி குறித்த பெண் எதியோப்பிய நாட்டைச் சேர்ந்த வீட்டுப் பணிப்பெண் ஒருவரினால் கழுத்தறுத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மஹவ பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த பெண்ணின் சடலம் கட்டார் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தின் ஊடாக இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

நீதிவான் விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளின் பின்னர் நீர்கொழும்பு பொது மயானத்தில் குறித்த பணிப்பெண்ணின் உடலை அடக்கம் செய்யுமாறு நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, கட்டுநாயக்க பொலிஸார் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ)

> சிங்கள மக்களையும் இந்தத் தீர்மானம் நிச்சயமாக சிந்திக்கத்தூண்டும். அழகிய இலங்கைத் தீவை சிங்கப்பூர் மாதிரி கொண்டுவரப்போகின்றீர்களா அல்லது சிரியாவாக்கப் போகின்றீர்களா என்பதையிட்டு அவர் கள் சிந்திக்கவேண்டும். அது குறித்த அழுத்தங்களை அவர்கள் இலங்கை அரசுக்குக் கொடுக்க வேண்டும்.

# ஒன்ராறியோ மாநில சட்டமூலம் தந்திருக்கும் உறுதியான செய்தி

## பிரேரணையை கொண்டுவருவதில் முக்கிய பங்காற்றிய லோகன் கணபதி எம்.பி. பேட்டி



கனடா, ஒன்ராறியோ மாநில றூஜ் பார்க் தொகுதிக்கான சட்டமன்றத்தின் உறுப்பினர் விஜய் தணிகாசலம், ஒன்ராறியோ சட்டமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை தமிழின அழிப்பு தொடர்பான அறிவியற் கிழமைக்கான சட்டமூலத்தை மூன்றாவது வாசிப்புக்கு கொண்டுவந்திருந்தார். அந்த சட்டமூலம் ஒன்ராறியோ சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளாலும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு இப்போது சட்டமாகியிருக்கின்றது. இது ஒரு வரலாற்று முக்கியத்ததுவம் வாய்ந்த தீர்மானமானம் எனச் சொல்வதற்குப் பல காரணங்கள் உள்ளன.

தமிழ் மக்கள் மீது இனஅழிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்தும் தீர்மானங்கள் இதற்கு முன்னர் இலங்கையின் வடமாகாண சபையில் சி.வி.விக்னேஸ்வரனாலும், தமிழ்நாடு சட்டசபையில் செல்வி ஜெயலலிதாவாலும் நிறைவேற்றப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், தென்னாசியாவுக்கு வெளியே இவ்வாறு ஒரு நாடாளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட்டுள்ள முதலாவது தீர்மானம் இதுவாகும்.

இன்னும் குறிப்பிட்டுச் சொல்வதானால், தமிழின அழிப்பு இலங்கையில் நடைபெற்றுள்ளது என்பதை அங்கீகரித்து அதனை சட்டமாக - அதனை கற்பித்தலுக்கு எடுக்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது இதுவே உலகின் முதலாவது வரலாற்று நிகழ்வாகும். இது ஏற்படுத்தக் கூடிய தாக்கங்கள் அதிகமாக இருக்கும் எனக் கூறுகின்றார் இதனைக் கொண்டுவருவதில் முக்கிய பங்காற்றிய லோகன் கணபதி.

இந்த சட்டமூலத்தை மாகாண சட்டப்பேரவையில் கொண்டுவந்த விஜய் தணிகாசலத்துடன், இணைந்து செயற்பட்டவர் லோகன் கணபதி. ஒன்ராறியோ மாநில சட்டப்பேரவை உறுப்பினரான அவர்தான், இது தொடர்பான சட்டமூலத்தை இறுதியாக்குவதற்குப் பொறுப்பாக இருந்த அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய குழுவின் தலைவராகச் செயற்பட்டவர். அனைத்துக் கட்சிகளின் சம்மதத்துடன் சபையில் இதனைக் கொண்டுவருவதற்காக சபாநாயகருக்கு இதனை நகர்த்தியவரும் லோகன் கணபதிதான். இது குறித்த பல முக்கியமான பல தகவல்களை அவர் நேர்காணல் ஒன்றில் தெரிவித்தார்.

**கேள்வி:** *தமிழின அழிப்பு அறிவியற் கிழமைக்கான சட்டமூலம் கனடாவின் ஒன்ராறியோ மாநில சட்டசபையில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இதன் முக்கியத்துவம் என்ன?*

**பதில்:** இந்தத் தீர்மானத்தை ஒன்ராறியோ மாநில சட்டசபையில் விஜய் தணிகாசலம் கொண்டுவந்திருந்தார். இந்தத் தீர்மானத்தின்படி மே மாதம் 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரையிலான காலம் தமிழின அழிப்பு அறிவியற் கிழமையாகப் பிரகடனப்படுத்தப்படு கின்றது. அதற்காகவே இந்தச் சட்டமூலம் கொண்டுவரப்பட்டது.

கனடாவில் கல்வி மாகாண அரசின் அதிகாரத்துக்கு உட்பட்டதாகவே இருக்கின்றது. அந்த வகையில் இந்த மாகாணத்தில் தமிழின அழிப்பு குறித்த கல்வியை இந்த சட்டமூலத்தைக் கொண்டுவந்ததன் மூலமாக அறிமுகப்படுத்தவுள்ளோம். அதாவது தமிழின அழிப்பு, படுகொலைகள் குறித்து கல்வி கற்பதற்கான ஒரு வாரம் இதன் மூலம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. ஒவ்வொரு வருடமும் மே மாதங்களில் 12 முதல் 18 ஆம் திகதி வரையில், தமிழனத்துக்கு எதிரான இனப்படுகொலை தொடர்பில் அனைத்து இன மக்களுக்கும் ஒரு விழிப்புணர்வைக் கொண்டு வருவதுதான் இந்தச் சட்டமூலத்தின் நோக்கம். இதன்படி உயர் கல்வி நிறுவனங்களில் இது தொடர்பான கல்வி இடம்பெறும்.

இலங்கையில் தமிழர்களுக்கு என்ன நடைபெற்றது? தமிழர்கள் எதற்காக இதனை வருடங்களாக நீதிகேட்டுப் போராடுகின்றார்கள்? என்பதை இந்த அறிவியல் கிழமையின் மூலம் கனடாவிலுள்ள அனைத்து இன மக்களும் அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும். அது தொடர்பான அறிவை அவர்களுக்கு வழங்குவதுதான் இந்தச் சட்டமூலத்தின் பிரதான நோக்கம்.

**கேள்வி:** *இந்த சட்டமூலத்தைக் கொண்டுவருவதில் எவ்வாறான சவால்களை எதிர்கொள்ளவேண்டியிருந்தது?*

**பதில்:** கடுமையான எதிர்ப்புக்கள் - அழுத்தங்களின் மத்தியில்தான் இந்தச் சட்டமூலம் கொண்டுவரப்பட்டது. குறிப்பாக இதனைத் தடுப்பதற்கான பல முயற்சிகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டது. அதனைவிட மாநில அளவிலும் தேசிய அளவிலும் கூட இதற்கு எதிர்ப்புக்கள் இருந்தன. பெடரல் அரசாங்கமும், ஐ.நா.வும் ஏற்றுக்கொள்ளாத நிலையில் இது போன்ற தீர்மானங்களைக் கொண்டுவருவதில் சில பிரச்சினைகள் மாகாணங்களுக்கு உள்ளன. அவ்வாறான அழுத்தங்களை எதிர்கொண்டுதான் இதனை நிறைவேற்றியிருக்கின்றோம். கனடாவின் வெளிவிவகாரக் கொள்கையையும் கவனத்திற்கொண்டு - அதற்கு முரண்படாத வகையில்தான் இதனை சட்டமூலமாக்கியிருக்கின்றோம்.

அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய குழுவில் விவாதிக்கப்பட்டே இந்தச் சட்டமூலம் இறுதி செய்யப்பட்டது. இதில் இறுதி செய்யப்படும் போது சில திருத்தங்கள் செய்யப்படும். இலங்கை அரசாங்கத்தின் ஆட்சேபனையும் அந்தக் குழுவிடமே தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தக் குழுவின் தலைவராக நான் இருந்ததால் அதனைக்கொண்டுவருவதற்கான அனைத்துக் கட்சிகளின் இணக்கப்பாட்டை சபாநாயகருக்குத் தெரிவிப்பதற்கான பொறுப்பும் என்னிடமே இருந்தது.

மூன்றாவது வாசிப்புக்கு இதனைக் கொண்டு வருவதற்கான யோசனையை சபாநாயகருக்குத் தெரியப்படுத்தினேன். அதனையடுத்து கடந்த வியாழக்கிழமை திடீரென பாராளுமன்றத்தில் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக சட்டமூலமாக நிறைவேற்றினோம்.

**கேள்வி:** *இது ஒரு மாநில சட்டசபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானமாகவுள்ள அதேவேளையில், தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் இது ஏற்படுத்தக்கூடிய தாக்கம் என்ன?*

**பதில்:** எமது மக்களுடைய போராட்டங்களை வன்முறையாகப் பார்க்கும் ஒரு நிலைதான் முன்னர் இருந்தது. தமிழ் மரபுரிமை வாரத்தை நாம் முன்னர் மார்க்கம் மாநகரசபையில் நிறைவேற்றிய பின்னர்தான் எங்களுடைய போராட்டங்கள் தொடர்பில் அவர்களுடைய மனப்போக்கில் மாற்றம் ஏற்பட்டது. இனப்படுகொலைத் தீர்மானம் ஒன்றையும் மார்க்கம் மாநகரசபையில் நாம் பிரகடனப்படுத்தியிருந்தோம். அப்போதுதான் அதிகாரிகள் பலரும் எமது போராட்டம் குறித்த தமது மனப்போக்கை மாற்றிக்கொண்டார்கள். எமது போராட்டங்களில் உள்ள நீதியை அவர்கள் உணர்ந்துகொண்டார்கள்.

இந்த நிலையில், இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள சட்டமூலத்தின் மூலம் இனப்படுகொலை தொடர்பாக அனைத்து இன மக்களுக்கும் கல்வி கற்பிக்கப்போகின்றோம். இதன்மூலமாக கனடாவிலுள்ள அனைத்து இன மக்களுடைய மனங்களிலும் மாற்றத்தை நிச்சயமாக ஏற்படுத்தமுடியும். இந்த விழிப்புணர்வை மேற்படுத்தப்போகும் வாரம் நிச்சயமாக மாற்றத்தை ஏற்படுத்தும்.

அதேபோல புலம்பெயர்ந்த நிலையில் பல்வேறு நாடுகளிலும் செயற்படும் அமைப்புக்களிடையே இது மாற்றத்தை ஏற்படுத்தும் - அவர்களுக்கு நம்பிக்கையைக் கொடுப்பதாகவும் இருக்கும். எமது இளைய தலைமுறையினரையும் இந்தப் பிரச்சினை குறித்து நிச்சயமாக சிந்திக்கத் தூண்டும். அவர்கள் மற்றைய இன மக்களுடன் இணைந்து உமது மக்களின் நீதிக்கான போராட்டங்களில் ஈடுபடுவதற்கும் இது தூண்டுகோளாக அமையும்.

**கேள்வி:** *இலங்கை அரசுக்கு இந்தச் சட்டமூலம் எவ்வாறான நெருக்கடியைக் கொடுப்பதாக அமையும்? அல்லது எவ்வாறான செய்தியைக் கொடுத்திருக்கின்றது?*

**பதில்:** கொவிட் காலத்தில் கூட இலங்கை அரசின் செயற்பாடுகள் கவலையளிப்பதாகவே இருந்து. குறிப்பாக தமிழ் மக்களுடைய விடயத்தில் அவர்களுடைய செயற்பாடுகளில் மாற்றங்களைக் காணமுடியவில்லை. இன, மதம், மொழி என்பவற் றைக் கடந்து செயற்பட வேண்டும் என்ற சிந்தனை அவர்களிடம் இருக்கவில்லை. தொடர்ந்தும் தமிழ் மக்களுடைய உரிமைகளை நசுக்கி, அடிமைகளாக வைத் திருக்க நினைக்கும் இலங்கை அரசுக்கு இந்த சட்டமூலம் ஒரு பாடமாக - எச்சரிக்கையாக இருக்கும்.

எமது மக்களைத் தொடர்ந்தும் அடிமைகளாக வைத்திருக்க முடியாது என்பதை இது இலங்கை அரசுக்கு உணர்த்தும். கனடிய மக்கள் அமைதியை விரும்புபவர்கள். மனித உரிமைகள் போன்ற விடயங்களில் அக்கறையுடன் செயற்படுபவர்கள். இவ்வாறான தீர்மானம் ஒன்று அங்கு கொண்டுவரப்பட்டிருப்பதை சாதாரணமாக எடுக்க முடியாது. அதனுடைய நியாயத்தை அது உணர்ததும்.

சிங்கள மக்களையும் இந்தத் தீர்மானம் நிச்சயமாக சிந்திக்கத்தூண்டும். அழகிய இலங்கைத் தீவை சிங்கப்பூர் மாதிரி கொண்டுவரப்போகின்றீர்களா அல்லது சிரியாவாக்கப்போகின்றீர்களா என்பதையிட்டு அவர் கள் சிந்திக்க வேண்டும். அது குறித்த அழுத்தங்களை அவர்கள் இலங்கை அரசுக்குக் கொடுக்க வேண்டும்.

இந்தத் தீர்மானம் இலங்கை அரசுக்கு உறுதியான செய்தி ஒன்றைச் சொல்லியிருக்கின்றது. நாங்கள் ஜனநாயக ரீதியாக அந்தந்த நாடுகளின் அரசியல் பெறுமான விழுமியங்களை மதித்து அந்த நாடுகளின் சட்டங்களுக்கூடாக ஈழத்தில் வாழும் மக்களுக்கு பலம் சேர்க்கிறம். அவர்களுடைய மனச்சாட்சியாக நாங்கள் செயற்படுகின்றோம். இதன்மூலம் ஜனநாயக பெறுமானங்களை மதித்து தமிழ் மக்களுக்குரியவைகளைக் கொடுக்க வேண்டும் என்ற நிலைக்குச் செல்வதற்குக் கூட இந்தச் சட்டமூலம் இலங்கை அரசை நிர்ப்பந்திக்கலாம்.

சிங்கள மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய முற்போக்கானவர்கள், மாணவர்கள் கூட தமிழ் மக்கள் எதற்காகப் போராடுகின்றார்கள் என்பதையிட்டு ஆராயமுற்படுவதற்கும் இது வழிவகுக்கலாம். உண்மையில் ஒடுக்குமுறையின் ஒரு விளைவுதான் எமது போராட்டம். அந்த வகையில் இலங்கை அரசுக்கு உறுதியான ஒரு செய்தியை இந்த சட்டமூலம் கொடுத்திருக்கின்றது.

# பிரிட்டன், இஸ்ரேல் வெற்றிக் கதைகள்

கிட்டத்தட்ட ஓராண்டு காலமாக முகக்கவசத்துடன் திரிந்த இஸ்ரேலியர்களுக்கு ஏப்ரல் 18இலிருந்து முகக்கவசம் இல்லாமல் வெளியே வருவதற்கு அந்நாட்டு அரசு அனுமதி கொடுத்தது. இஸ்ரேலியர்கள் சுதந்திரக் காற்றை சுவாசித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் அதற்கு அந்நாட்டின் தடுப்பூசி இயக்கமும் மக்களின் ஒத்துழைப்பும்தான் காரணம்.

தம்பி

இலங்கை, இந்தியா உட்பட பல நாடுகள் கொரோனாவின் இரண்டாவது அலையில் சிக்கித் தடுமாறிக்கொண்டிருக்கும் வேளையில் சில நாடுகள் வெற்றிகரமாக மீண்டிருக்கின்றன. கொரோனாவுக்கு எதிரான போரில் பிரிட்டனும் இஸ்ரேலும் இன்று உலகுக்கே முன்னுதாரணமாகத் திகழ்கின்றன.

**பிரிட்டன் - வேற்றுருவ கொரோனா**

2020-ன் இறுதியில் பிரிட்டனில் கொரோனாவின் புதிய வேற்றுருவம் (variant) தலைகாட்டியதிலிருந்து உலகமே பிரிட்டனை அச்சத்துடன் பார்க்க ஆரம்பித்தது. பெரும்பாலான நாடுகள் பிரிட்டனிலிருந்து வரும் விமானங்களையும் அங்கு செல்லும் விமானங்க ளையும் தடைசெய்தன. இந்த வேற்றுருவத்துக்கு பி.1.1.7 என்று பெயர். உலகெங்கும் இரண்டாவது அலையின் தீவிரத்துக்கு இந்த வகையும் இந்திய வகை, தென்னாப்பிரிக்க வகை போன்றவையும் காரணமாகக் கூறப்படுகின்றன.

பிரிட்டனில் இரண்டாவது அலை உச்சத்தில் இருந்த ஜனவரி 8 அன்று மட்டும் ஏற்பட்ட புதிய தொற்றுகளின் எண்ணிக்கை 67,928 இறப்பு களைப் பொறுத்தவரை ஜனவரி 20 அன்று 1,823 பேர் பலியா னதே உச்சம். இந்திய மக்கள் தொகையில் 20 இல் ஒரு பங்கே மக்கள்தொகையைக் கொண்ட பிரிட்டனுக்கு இது பெரும் பாதிப்பு.




பிரிட்டனில் காணப்படும் பி.1.1.7 வேற்றுருவத்துக்கும் இந்தியாவில் காணப்படும் பி.1.167-க்கும் இடையே முக்கியமான வேறுபாடு அவற்றின் கூர்ப்புரதங்களில் (spike protein) நிகழ்ந்திருக்கும் திடீர் மாற்றங்களே (mutations). கூர்ப்புரதங்களைக் கொண்டுதான் கொரோனா வைரஸ் நம்முடைய செல்களில் ஊடுருவும். இந்திய வேற்றுருவத்தில் இரண்டு கூர்ப்புரதங்களில் மாற்றங்கள் நிகழ்ந்திருப்பதே அது பிரிட்டன் வேற்றுருவத்தைவிட அதிகமாகப் பரவுவதற்குக் காரணம். கூர்ப்புரதங்களில் மாற்றங்கள் நிகழும்போது உடலின் நோய் எதிர்ப்புசக்தி, உடலுக்குள் செலுத்திக்கொண்ட தடுப்பு மருந்தின் சக்தி போன்றவை கொரோனாவுக்கு எதிராகக் குறைவாகவே செயலாற்றும். அதனால்தான், தடுப்பு மருந்து எடுத்துக் கொண்டவர்களுக்கும்கூடத் தொற்று ஏற்படுகிறது.

இந்தச் சிக்கலோடுதான் இரண்டாம் அலையை பிரிட்டன் எதிர்கொண்டது. ஜனவரியிலிருந்து மூன்று மாதங்களுக்குக் கடுமை யான ஊரடங்கை விதித்தது. கூடவே, தடுப்பூசி இயக்கத்தையும் முடுக்கிவிட்டது. பைசர்-பயோஎன்டெக், ஒக்ஸ்போர்ட்-அஸ்ட்ராஜெனகா, மாடர்னா ஆகிய மூன்று தடுப்பூசிகளும் பிரிட்டன் மக்களுக்குச் செலுத்தப்பட்டன. இதுவரை பிரிட்டனின் மொத்த மக்கள்தொகையான 6.60 கோடியில் 3.50 கோடி பேருக்குக் குறைந்தபட்சம் முதலாவது டோஸ் தடுப்பூசி போடப்பட்டிருக்கிறது. தன்னுடைய மக்கள்தொகையில் பாதி பேருக்கு மேல் விரைவாகத் தடுப்பூசி செலுத்திய நாடுகளில் பிரிட்டன் இரண்டாவது இடத்தில் இருக்கிறது. 50 வயதைத் தாண்டியவர்களில் 95% பேருக்கு அங்கு தடுப்பூசி போடப்பட்டிருக்கிறது.

கடுமையான ஊரடங்கு, வெற்றிகரமான தடுப்பூசி இயக்கம் இரண்டையும் அடுத்து, தற்போது தினசரித் தொற்று வெகுவாகக் குறைந்திருக்கிறது. மே 8 அன்று ஒட்டுமொத்த பிரிட்டனிலும் 2,047 தொற்றுகள் மட்டுமே கண்டறியப்பட்டன. அன்றைய தினம் கொரோனாவால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 5 மட்டும்தான்.

இதே வேகத்தில் பிரிட்டன் செயல் பட்டால் ஒகஸ்ட் வாக்கில் அந்நாடு கொரோனா விலிருந்து முற்றிலும் விடுபட வாய்ப்பிருப்பதாகக் கூறுகிறார்கள். தடுப்பூசி, ஊரடங்கைத் தாண்டியும் அந்நாட்டு மக்களின் சுய கட்டுப்பாடும் இந்த வெற்றிக் கதைக்கு முக்கிய பங்களித்திருக்கிறது.




**இஸ்ரேலின் கதை**

கொரோனாவால் கடுமையாக பாதிக்கப்பட்ட நாடுகளில் இஸ்ரேலும் ஒன்று. இதுவரை இஸ்ரேலில் 838,887 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இது, கிட்டத்தட்ட அந்த நாட்டு மக்கள்தொகையில் பத்தில் ஒரு பங்கு. இரண்டாவது அலையில் ஜனவரி 20 அன்று 10,213 பேருக்குத் தொற்று ஏற்பட்டதே உச்சம். அன்றுதான் ஒரு நாளின் அதிகபட்ச அளவாக 101 பேர் உயிரிழந்தார்கள். இந்த நிலையிலிருந்து ஏப்ரல் 27இல் புதிய தொற்றுகள் 315, இறப்பு எண்ணிக்கை மே 8 அன்று 1 என்ற அளவுக்குக் குறைந்திருக்கிறது.

**எப்படி சாதித்தது இஸ்ரேல்?**

இஸ்ரேல் பெரும்பாலான நாடுகளுக்கு முன்னதாக, டிசெம்பர் 19, 2020 இல் தனது தடுப்பூசி இயக்கத்தைத் தொடங்கியது. இதுவரை 50 லட்சம் பேருக்குத் தடுப்பூசி செலுத்தப்பட்டிருக்கிறது. இது அந்த நாட்டு மக்கள்தொகையில் 56 வீதம்.மேலும், 100 பேருக்கு 120 டோஸ் என்ற அளவில் தடுப்பூசி செலுத்தி இவ்வகையில் உலகிலேயே முதல் இடத்தை இஸ்ரேல் வகிக்கிறது. மக்கள்தொகையில் 65-70% பேருக்குத் தடுப்பூசி செலுத்தப்பட்டால் திரள் எதிர்ப்புசக்தி (herd immunity) கிடைத்துவிடும் என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது. அதன் அடிப்படையில், திரள் எதிர்ப்புசக்தியை நோக்கி நடைபோடும் முதல் நாடாக இஸ்ரேல் உள்ளது.

ஊரடங்குகள் விதித்தும் கொரோனாவின் தீவிரம் குறையாத நிலையில் - தடுப்பூசி இயக்கமே உண்மையான வெற்றியை இஸ்ரேலுக்குப் பெற்றுத்தந்தது. கொரோனா அச்சத்தின் காரணமாக மக்கள் முடங்கிப் போய்விடாமல் இருப்பதற்காக 'பசுமைக் கடவுச் சீட்டு' (Green Passport) என்ற செயலி அறிமுகப்படுத்தப்பட்டது. தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்கள், தொற்றிலிருந்து குணமானவர்கள் போன்றோருக்கு இந்தச் செயலியின் மூலம் சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்தச் செயலியை வைத்திருப்பவர்கள் திருமணம், விழாக்கள், உடற்பயிற்சிக் கூடங்கள், நீச்சல் குளம் போன்றவற்றுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள். பசுமைக் கடவுச் சீட்டு இல்லாமல் பொது நிகழ்வுகளில் கலந்துகொண்டால் கடும் தண்டனை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

கிட்டத்தட்ட ஓராண்டு காலமாக முகக்கவசத்துடன் திரிந்த இஸ்ரேலியர்களுக்கு ஏப்ரல் 18 இலிருந்து முகக்கவசம் இல்லாமல் வெளியே வருவதற்கு அந்நாட்டு அரசு அனுமதி கொடுத்தது.

இஸ்ரேலியர்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் அதற்கு அந்நாட்டின் தடுப்பூசி இயக்கமும் மக்களின் ஒத்துழைப்பும்தான் காரணம்.

பிரிட்டன், இஸ்ரேல் இரண்டு நாடுகளின் வெற்றியிலிருந்து கற்றுக்கொள்ள எவ்வளவோ இருக்கிறது. திரள் எதிர்ப்புசக்தியைப் பெறுவதற்கு நம் மக்கள்தொகையில் குறைந்தபட்சம் 65 வீதம் பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட வேண்டும். கொரோனா வைரஸ் புதுப் புது வடிவங்கள் எடுத்துக்கொண்டிருக்கும் நிலையில் தடுப்பூசி இயக்கத்தை இன்னும் பல மடங்கு வேகத்தில் முடுக்கிவிடுவதே நம் முன் உள்ள ஒரே வழி!

# புலமைச் சிகரம்


**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

மாதிரிப் பரீட்சை - 2
வினாத்தாள் II

நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - எஸ்.மயூரன்

கல்வி tv CHANNEL

21) மு.ப 10.15 நூலகத்தில் வாசிக்கத் தொடங்கிய குமரன் 4 மணித்தியாலம் 35 நிமிடங்கள் வரை வாசித்தான்.
1. குமரன் நூலகத்தில் வாசிக்க ஆரம்பித்த நேரத்தை 24 மணித்தியாலக் கடிகார நேரமாக எழுதுக.
............................................. மணித்தியாலம்
2. அவன் நூலகத்தில் வாசித்து முடித்த நேரம் யாது?.............................................

22)

1. உருவினுள்ளே காணப்படும் செங்கோணங்கள் எத்தனை?
.............................................
2. உருவினுள்ளே காணப்படும் முக்கோணிகள் எத்தனை உள்ளன?
.............................................


23) 320 புத்தகங்களிலிருந்து 3/4 ஐ விற்ற பின்னர், எஞ்சியிருக்கும் புத்தகங்கள் எத்தனை?
.............................................


24) ஒரு பாத்திரத்திலுள்ள தேங்காய் எண்ணெயிலிருந்து 3 லீற்றர் 750 மில்லி லீற்றரை விற்பனை செய்த பின், எஞ்சியிருக்கும் கனவளவு 4 லீற்றர் 475 மில்லி லீற்றர் ஆகும். பாத்திரத்தில் ஆரம்பத்திலிருந்த தேங்காய் எண்ணெய் எவ்வளவு?
.............................................

25.

| | |
|---|---|
| 21 | 42 |
| 26 | 34 |
| 36 | 18 |

அடைப்பினுள் தரப்பட்டுள்ள எண்களில் 2 ஆலும், 3 ஆலும் மீதியின்றி வகுபடக்கூடிய எண்கள் எவை?
.............................................

26) கீழே தரப்பட்டுள்ள உருவைப் பயன்படுத்தி, விடை தருக.

1. உருவில் நிழற்றப்பட்ட பகுதி, மொத்த உருவின் என்ன பின்னம்?
.............................................
2. உருவின் மொத்தப் பரப்பளவு, நிழற்றப்பட்ட பகுதியின் எத்தனை மடங்கு? .............................................

27) கீழேயுள்ள உருவைப் பயன்படுத்தி விடை தருக



1. உருவின் பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றர்?
.............................................
2. இவ்வுருவில் உள்ள வடிவத்தை சதுர வடிவமாக்க, அதன் அகலப் பக்கத்துடன் எத்தனை சென்ரிமீற்றர் கூட்ட வேண்டும்?
.............................................

28)

| | |
|---|---|
| 263 | 821 |
| 634 | |

அடைப்பினுள் தரப்பட்டுள்ள எண்களை நான்கினால் வகுக்கும் போது, 2 மீதியாகும். எண் யாது? .............................................

29) 5m நீளமுள்ள நாடாவிலிருந்து 15 cm நீளமுள்ள 8 துண்டுகள் வெட்டப்பட்டன. நாடாவின் எஞ்சியுள்ள பகுதியின் நீளம் யாது?
.............................................

30) தரம் 5 வகுப்பில் கற்கும் மாணவர்கள் விரும்பும் செல்லப்பிராணிகளின் தகவல்கள் இவ்வரைபில் காட்டப்பட்டுள்ளன.


1. நாயை விரும்பும் மாணவர் தொகை, பூனையை விரும்பும் மாணவரின் எண்ணிக்கையின் நான்கு மடங்காகும். பூனையை விரும்பும் மாணவர் தொகையை வரைபில் நிழற்றிக் காட்டுக.
2. வகுப்பிலுள்ள மாணவர் தொகை யாது?
.............................................

* 31 தொடக்கம் 60 வரையுள்ள வினாக்களுக்குரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து, அதன் கீழ் கோடிடுக.

31) அருகில் உள்ள வரிப்படம் சூரிய நமஸ்காரத்தின் எந்தப் படிநிலையைக் குறிக்கும்?

1. 3 ஆம்நிலை 3. 5 ஆம்நிலை
2. 4 ஆம்நிலை 4. 6 ஆம்நிலை

32) நீரினுள்ளே பூக்கும் பூ எது?
1. தாமரை 2. அல்லி 3. வேலம்பாசி 4. வெங்காயத்தாமரை

33) சித்திரை மாதத்தில் பூத்துக்காய்க்கும் தாவரம் எது?
1. முல்லை 2. ஐம்பு 3. வேம்பு 4. மரமுந்திரி

34) நகருயிரி விலங்குக்கு உதாரணமாக அமைவது
1. முள்ளம்பன்றி 2. தேவாங்கு 3. மரத்தவளை 4. பாம்பு

35) வீட்டுத்தோட்டப்பயிரைச் சேதமாக்கும் பூச்சி பீடைகளை விரட்ட உதவும் பாதார்த்தம்
1. பூச்சி நாசினிகள் 2. இயற்கைத் தாவரச்சாறு
3. வேப்பெண்ணெய் 4. மூலிகைத்தாவரம்

36) அதிகளவு உடற்பருமனடையவர்கள் தவிர்க்க வேண்டிய உணவு வகை
1. பச்சைக்காய்கறி வகைகள் 2. சிறிய மீன்கள்
3. பொரித்த உணவு வகை 4. கௌபி வகை

37) கிராமப்புற மக்கள் தேநீரை சுவையூட்ட பயன்படுத்தும் மூலிகைத் தாவரம் எது?
1. நன்னாரி 2. வெட்டி வேர் 3. பால் அறுகு 4. கறுவா

38) அதிகளவு கனியுப்புக்களைக் கொண்ட உணவு வகை?
1. உருளைக்கிழங்கு 2. நெத்தலிக்கருவாடு
3. தக்காளிப்பழம் 4. கரட் கிழங்கு

39) தெருவொன்றில் விபத்து நேரிடும் போது, உடனடியாக உதவிக்கு அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம் யாது?
1. 119 2. 1919 3. 1929 4. 1978

# நல்லாட்சியில் விதைத்த விதைகள் பெரும் விருட்சமாகிவிட்டன இன்று

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் பெருமிதம்

நுவரெலியா, மே 11

**“நாங்கள் அன்று நல்லாட்சி அரசில் கல்வி அபிவிருத்திக்காக விதைத்த விதைகள் இன்று பெருவிருட்சமாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. அந்த வளர்ச்சியின் ஒரு கட்டமாகவே தற்போது வெளியாகியுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அமைந்திருக்கின்றன. இந்தக் கல்வி வளர்ச்சியையே நான் எதிர்பார்த்தேன்.” இவ்வாறு முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.**




அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“தற்போது ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில் அந்தப் பெறுபேறுகள் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளன.

நாட்டில் கொரோனாத் தொற்று பரவி வருகின்ற இந்தச் சூழ்நிலையில் இந்த சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள தங்களை அர்ப்பணித்துச் சேவை செய்த கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் தனியார் கல்வி நிறுவனங்களை நடத்துகின்ற ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலையின் பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் அனைவரையும் பாராட்டுகின்றேன்.

கடந்த காலங்களில் குறைவான நாட்களே பாடசாலைகள் நடைபெற்றன. இருந்தாலும் மேற்குறிப்பிட்டுள்ள அனைவரும் தங்களுடைய அர்ப்பணிப்பின் காரணமாகவே இந்தப் பெறுபேறுகள் கிடைத்துள்ளன.

குறிப்பாக பெற்றோர்கள் இந்தக் காலகட்டத்தில் தங்களுடைய பிள்ளைகளுக்குத் தொலைபேசிகளையும் அதற்கான டேட்டாகளையும் பெரும் செலவாகக் கருதாமல் தங்களுடைய முதலீடாகவும் கடமையாகவும் கருதிப் பெற்றுக்கொடுத்துச் செயற்பட்டார்கள். அதேபோல் கற்பித்த ஆசிரியர்களும் தங்களுடைய பொறுப்பை உணர்ந்து செயல்பட்டார்கள். இவையே இந்த வெற்றிக்கு முக்கிய காரணம்.

நாங்கள் ஒரு விடயத்தை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். நாங்கள் அனைவரும் ஒற்றுமையாகச் செயல்பட்டால் வெற்றி என்பது மிகவும் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரு விடயம். அதற்கு எங்களுடைய ஒற்றுமையும் அர்ப்பணிப்பு மாத்திரமே அவசியமானது.

குறிப்பாக பின்தங்கிய பல பாடசாலைகளில் இருந்து அதிகளவு மாணவர்கள் இம்முறை சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகத்துக்குச் செல்வதற்கான வாய்ப்பைப் பெற்றிருக்கின்றார்கள்.

நாங்கள் நல்லாட்சி அரசில் அபிவிருத்தி செய்த கணித, விஞ்ஞானப் பாடசாலைகளிலும் பெறுபேறுகள் சிறப்பாக அமைந்துள்ளன” - என்றார். (இ)

# பாராளுமன்ற பொலிஸ் பாதுகாப்பில் மாற்றம்

கொழும்பு, மே 11

பாராளுமன்ற பொலிஸ் பிரிவு, விசேட பாதுகாப்பு பிரிவுக்குப் பொறுப்பாகப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஹிந்த குணரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். இம்மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்ற பொலிஸ் பிரிவானது இதுவரை மேல் மாகாண தெற்கு பிரிவு பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் இருந்தது. எனினும், தனிப் பொலிஸ் பிரிவின் கீழ் செயல்படுவதன் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் பாதுகாப்புப் பிரிவும் மஹிந்த குணரத்னவின் கீழ் செயற்பட்டு வருகின்றது.

புதிய மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் பொலிஸின் மேலும் பல பிரிவுகள் பல்வேறு மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என அறியவருகின்றது.

கொரோனா அபாயத்தைக் கருத்தில்கொண்டு பாராளுமன்றத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளும் மறுசீரமைக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்: மேலும் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்

## போக்குவரத்துத் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, மே 11

இவ்வருடம் ஏப்ரல் முதலாம் திகதி முதல் செப்ரெம்பர் 30ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் காலாவதியாகும் அனைத்து சாரதி அனுமதிப் பத்திரங்களுக்கும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் சலுகைக் காலம் வழங்க முடிவு செய்துள்ளது.

அதன்படி, குறித்த காலப் பகுதிக்குள் காலாவதியாகும் அனைத்து சாரதி அனுமதிப் பத்திரங்களும் காலாவதியாகும் திகதியிலிருந்து மேலும் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றால் நாரஹன்பிட்டி மற்றும் வெரஹெரவில் அமைந்துள்ள இலங்கை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அலுவலகங்கள் தொடர்ந்தும் தற்காலிகமாக மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே, இந்தச் சலுகைக் காலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# 3ஆவது கொரோனா சிகிச்சை நிலையம் திருமலையில் சனியன்று திறந்துவைப்பு

திருகோணமலை, மே 11

திருகோணமலை மாவட்டத்தில் மூன்றாவது கொரோனா இடைநிலை சிகிச்சை நிலையம் கோமரங்கடவல பிரதேச வைத்தியசாலையில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ. ஆர்.எம்.தௌபீக்கால் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.



திருகோணமலை மாவட்டத்தில் ஈச்சிலம்பற்று பிரதேச வைத்தியசாலை, குச்சவெளி பிரதேச வைத்தியசாலை, கோமரங்கடவல பிரதேச வைத்தியசாலை ஆகிய மூன்று வைத்தியசாலைகளும் கொரோனா இடைநிலை சிகிச்சை நிலையமாக மாற்றப்பட்ட நிலையில், குச்சவெளி கொரோனா இடைநிலை சிகிச்சை நிலையத்தில் பெண்கள் மாத்திரம் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் இதன்போது தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த காலத்தில் தொற்றாளர்கள் வேறு மாவட்டங்களுக்கு சிகிச்சைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டனர் எனவும், இனிவரும் காலங்களில் திருகோணமலை மாவட்டத்துக்குள் தொற்றாளர்களுக்கு சிகிச்சை வழங்கப் படஉள்ளது எனவும் அவர் குறிப் பிட்டார்.

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த ஒரு மாத காலத்துக்குள் 936 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் மத்திய சுகாதார அமைச்சின் வழிகாட்டலுக்கு அமைவாக நோயாளர்களின் கட்டில்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (இ)

# இலங்கை உள்ளிட்ட நான்கு நாடுகளின் பயணிகள் வருவதற்கு ஐக்கிய அரபு இராச்சியம் தடை விதிப்பு

கொழும்பு, மே 11

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் நிலைமையைக் கருத்தில்கொண்டு இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் நேபாளம் உள்ளிட்ட நாடுகளில் இருந்து பயணிகள் வருவதற்குத் தடை விதிப்பதற்கு ஐக்கிய அரபு இராச்சியம் தீர்மானித்துள்ளது.

இதன்படி மே 12 ஆம் திகதி நள்ளிரவு முதல் குறித்த நாடுகளில் இருந்து வரும் விமானங்களில் பயணிகள் வருவதற்குத் தடை விதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என ஐக்கிய அரபு இராச்சியத்தின் தேசிய அவசர நிலை மற்றும் அனர்த்த முகாமைத்துவ அதிகார சபை அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும் குறித்த நாடுகளில் இருந்து ஐக்கிய அரபு இராச்சியம் ஊடாக வேறு நாடுகளுக்குச் செல்லும் பயணிகளுக்குக் குறித்த தடை விதிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய அரபு இராச்சிய குடிமக்கள், இராஜதந்திரப் பணிகள், உத்தியோகபூர்வ தூதுக்குழுக்கள் மற்றும் கோல்டன் விசா வைத்திருப்பவர்கள் நாட்டுக்கு வர முடியும் எனவும், ஆனால், அவர்கள் நாட்டுக்கு வந்ததும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் 10 நாட்களுக்குத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மேல் மாகாணத்தில் 9 நாட்களில் 10 ஆயிரம் பேருக்கு கொரோனா

கொழும்பு, மே 11

மேல் மாகாணத்தில் கடந்த மே முதலாம் திகதி தொடக்கம் நேற்றுமுன்தினம் 9ஆம் திகதி வரை 10 ஆயிரம் பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி கொழும்பு மாவட்டத்தில் 4,246 பேருக்கும், கம்பஹா மாவட்டத்தில் 3,240 பேருக்கும், களுத்துறை மாவட்டத்தில் 2,514 பேருக்கும் இவ்வாறு வைரஸ் தொற்றியுள்ளது என அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)



# நியூஸிலாந்தில் கத்தி குத்து 4 பொதுமக்கள் படுகாயம்!

## மூவரின் நிலை கவலைக்கிடம்

வெலிங்டன், மே 11

நியூஸிலாந்தில் வணிக வளாகம் ஒன்றில் இடம்பெற்ற கத்திக் குத்து தாக்குதலில் குறைந்தது நான்கு பேர் காயமடைந்தனர். இவர்களில் மூன்று பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நியூஸிலாந்தின் தெற்கு தீவான டுனெடினில் உள்ள வணிக வளாகத்தில் அந்நாட்டு நேரப்படி நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.

இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் குறித்து அதிர்ச்சியும் கவலையும் வெளியிட்டுள்ள நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன், தாக்குதலின் பின்னணி குறித்து இதுவரை தெளிவாகத் தெரியவில்லை எனக் கூறியுள்ளார்.

நியூஸிலாந்தில் இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் அரிதானவை. ஆனால், 2019-ஆம் ஆண்டு ஒரு வெள்ளை மேலாதிக்கவாதி இரண்டு மசூதிகளுக்குள் புகுந்து 50 க்கும் மேற்பட்டவர்களைக் கொன்றமை பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அமெரிக்காவில் கொரோனாவுக்கு 9 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பலி!



வாஷிங்டன், மே 11

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்று நோயால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் எண்ணிக்கை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதைவிட இலட்சக்கணக்கில் அதிகமாக இருக்கலாம் என அமெரிக்காவின் சிரேஷ்ட தொற்று நோய் நிபுணர் அன்ரனி பாசி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் தரவுகளின்படி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வரை அமெரிக்காவில் கொரோனா மரணங்கள் 5 இலட்சத்து 81 ஆயிரத்து 752 ஆகப் பதிவாகியுள்ளன. அத்துடன், 3 கோடியே 27 இலட்சத்துக்கு அதிகமான தொற்று நோயாளர்கள் பதிவாகியிருக்கின்றனர் என்று கூறப்பட்டது.

உத்தியோகபூர்வ தரவுகளை அடிப்படையாகக் கொண்ட இந்த புள்ளிவிபரம் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், உண்மையான மரணங்கள் 9 இலட்சத்துக்கும் அதிகமாக இருக்கலாம் என்று தான் நம்புகிறார் என்று பாசி கூறினார். உத்தேச இறப்புக்கள் 9 இலட்சம் வரை இருக்கலாம் என சில தரவுகள் கணித்துள்ளமை குறித்து கேள்வி எழுப்பியபோதே பாசி இவ்வாறு தெரிவித்தார். (ஐ)



# ஆப்கானில் களைகட்டுகிறது ஸ்ரோபெரி பழம் அறுவடை!

காபூல், மே 11

ஆப்கானிஸ்தான் தென்பகுதியில் உள்ள கந்தஹார் மாகாணத்தில் ஸ்ரோபெரி பழங்களின் அறுவடைக் காலம் ஆரம்பித்துள்ளது.

ஆப்கானிய விவசாயிகள் ஸ்ரோபெரி பழங்களின் அறுவடையில் ஆர்வமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கொரோனா தொற்று நோய் நெருக்கடியால் சரிந்து போயுள்ள பொருளாதாரத்தை உயர்த்தவும், வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டு ஆப்கான் அரசாங்கம் அதிகளவில் விவசாயத் துறைகளில் முதலீடுகளை செய்து வருகின்றது. அதன் ஓர் அங்கமாக ஸ்ரோபெரி செய்கையும் வழமையை விட இந்த ஆண்டு அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மசூதியில்கூடிய பலஸ்தீனர்மீது இஸ்ரேல் இராணுவம் தாக்குதல்!

## நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அமெரிக்கா உட்பட நாடுகள் கண்டனம்



ஜெருசலேமின் அல்-அக்ஸா மசூதியில் கூடிய பாலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இது உலக நாடுகளை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

இதுகுறித்து சர்வதேச ஊடகங்கள் வெளியிட்ட செய்திகளில்,

இஸ்லாமியத்தின் மூன்றாவது புனித தலமாகப் போற்றப்படும் அல்-அக்ஸா மசூதியில் சனிக்கிழமை இரவு பலஸ்தீனர்கள்கூடினர். ரமழானை முன்னிட்டு சுமார் 90 ஆயிரம் பலஸ்தீனர்கள் அங்கு கூடி தொழுகையில் ஈடுபட்டனர். இதையறிந்து அங்கு வந்த இஸ்ரேல் படைகள் பலஸ்தீனர்களை அங்கிருந்து வெளியேற்றினர்.

இதறகாக அவர்கள் கண்ணீர் புகை குண்டுகளை பலஸ்தீனர்கள் மீது வீசினர். மசூதி உள்ளேயும் கண்ணீர் புகை குண்டுகள் வீசப்பட்டன. பொலிஸார் நடத்திய தாக்குதலில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் காயம் அடைந்தனர். இத்தாக்குதலில் காயமடைந்தவர்களில் பெண்களும் அடங்குவர்.

இந்த நிலையில் இத்தாக்குதலைக் கண்டித்து அப்பகுதியில் பலஸ்தீனர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அல் அக்ஸா மசூதி அருகே இஸ்ரேல் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். இதனால் அங்கு பதற்றம் நிலவுகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

1967இல் மத்திய கிழக்குப் போர் நடைபெற்றபோது கிழக்கு ஜெருசலேமை இஸ்ரேல் கைப்பற்றியது. ஒருங்கிணைந்த ஜெருசலேமே தங்கள் தலைநகரம் என்று அந்நாடு அறிவித்தது. இதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்து வரும் பலஸ்தீனர்கள், வருங்காலத்தில் கிழக்கு ஜெருசலேம் எங்கள் தலைநகராக இருக்கும் என்று கூறிவருகின்றனர்.

பெரும்பாலான உலக நாடுகள் ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக ஏற்கவில்லை. இந்த நிலையில் ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்தார். இதனைத் தொடர்ந்து இஸ்ரேல் - பலஸ்தீனம் இடையே மோதல் வலுத்து வருகிறது. (ஐ)

# இந்தியாவில் நேற்று 3,66,161 தொற்றாளர்


புதுடில்லி, மே 11

இந்தியாவில் நேற்று காலை வரையான 24 மணிநேரத்தில் 3 இலட்சத்து 66 ஆயிரத்து 161 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தக் காலப் பகுதியில் 3,754 பேர் உயிரிழந்தனர்.

அங்கு, தினசரி கொரோனா வைரஸ் தொற்று நோயாளர் தொகை 4 இலட்சத்தைக் கடந்து அதிகரித்து வந்த நிலையில் நேற்று இதில் சற்று சரிவு ஏற்பட்டுள்ளது.

புதிய தொற்று நோயாளர்களுடன் இந்தியாவில் இதுவரை தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 கோடியே 26 இலட்சத்து 62 ஆயிரத்து 575 ஆக உயர்ந்துள்ளது.

கொரோனா வைரஸால் இதுவரை உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 46 ஆயிரத்து 116 ஆக உயர்ந்துள்ளது. (ஐ)





# ஆப்கான் பாடசாலை தாக்குதல்! மாணவியர் பலி 85ஆக உயர்வு!!

காபூல், மே 11

ஆப்கானிஸ்தானில் பாடசாலை மாணவிகள்மீது நடத்தப்பட்ட குண்டுவெடிப்பு தாக்குதலில் பலியானவர்களின் எண்ணிக்கை 85ஆக அதிகரித்துள்ளது.

இதுகுறித்து ஆப்கான் ஊடகங்களில் வெளியான தகவல்களின்படி,

"காபூலில் உள்ள சயித் அல் ஹாடா பாடசாலைக்கு முன் பகுதியில் சனிக்கிழமை மாலை காரில் வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் பலியானவர்களின் எண்ணிக்கை 85 ஆக அதிகரித்துள்ளது. பலியானவர்களில் பெரும்பாலானவர்கள் பாடசாலை மாணவிகள். இந்தச் சம்பவத்தில் 105இற்கும் அதிக மானவர்கள் காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. தலிபான்கள் தாங்கள் செய்யவில்லை என்று மறுத்துவிட்டனர்" என்று செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

ஆப்கானில் ஷியா முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் ஐ.எஸ். தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் இந்தத் தாக்குதலையும் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்தி இருக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதலுக்கு அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. (ஐ)




## முன்னணி வீரர்கள் எவரும் இன்றி இலங்கை வருகிறது இந்திய அணி!

புதுடில்லி, மே 11

எதிர்வரும் ஜூலை மாதம் இலங்கை வரும், இந்திய அணி ஒருநாள், இருபது - 20 தொடர்களில் விளையாடவுள்ளது என்று இந்தியக் கிரிக்கெட் சபையின்(பி.சி.சிஐ.) தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

ஆனால், இந்தத் தொடரில் முன்னணி வீரர்கள் எவரும் பங்கேற்க மாட்டார்கள் என்றும் கங்குலி தெரிவித்துள்ளார்.

இலங்கை வரும் இந்திய அணி 3 ஒருநாள், 5 இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடர்களில் பங்கேற்கிறது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டி, இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர் ஆகியவற்றில் பங்கேற்பதற்காக ஜூன் 2 ஆம் திகதி இந்திய அணி இங்கிலாந்துக்கு புறப்படுகின்றது. இதனால், இலங்கை வரும் இந்திய அணியில் முன்னணி வீரர்கள் யாரும் பங்கேற்க மாட்டார்கள் என்றும் அவர் கூறினார். (ஐ)

## டெஸ்ட் அணிக்கு பாண்ட்யா தெரிவு செய்யப்படாதது ஏன்?

புதுடில்லி, மே 11

இருபது - 20 உலகக்கிண்ணப் போட்டியில் முழு உடற் தகுதியுடன் இருக்க வேண்டும் என்பதற்காக சகலதுறை வீரர் ஹார்திக் பாண்ட்யா, இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கு தெரிவு செய்யப்படவில்லை.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர் மற்றும் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டி இறுதிப் போட்டிக்கான இந்திய அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

விராட் கோலி தலைமையிலான இந்திய அணியில் ஜடேஜா, ஷமி, விஹாரி ஆகியோர் மீண்டும் தெரிவாகினர். ஹார்திக் பாண்ட்யா, குல்தீப் யாதவ் ஆகியோருக்கு இடமில்லை. மேலும், வேகப்பந்து வீச்சாளர்களான புவனேஷ்வர் குமார், நடராஜன் ஆகியோரும் இந்திய அணியில் இடம்பெறவில்லை.

சமீபகாலமாக காயங்களால் அவதிப்பட்டமையால் புவனேஸ்வர் குமாருக்கு டெஸ்ட் அணியில் இடம் வழங்கப்படவில்லை.

ஜூன் 18 முதல் 22 வரை நியூஸிலாந்துக்கு எதிரான உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாடுகிறது இந்திய அணி. இதன்பிறகு இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர், ஒகஸ்ட் 4ஆம் திகதி தொடங்குகிறது.

இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் இடம்பெறுவார் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஹார்திக் பாண்ட்யா தெரிவாகவில்லை.

ஐ.பி.எல். போட்டியில் ஆடியபோது பாண்ட்யாவுக்கு தோள்பட்டையில் இலேசான காயம் ஏற்பட்டது. இதனால், அவர் மும்பை அணிக்காக ஆடிய 7 போட்டிகளிலும் பந்துவீசவில்லை. இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரில் பந்துவீசும் அளவுக்கு உடல்தகுதி பெற வேண்டும் என்பதற்காக அவர் அவர் இந்தத் தொடரில் ஆடவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)




# மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ்: சபலென்கா சம்பியன்!

மட்ரிட், மே 11

மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் ஒற்றையர் பிரிவில் பெலாரஸ் வீராங்கனை சபலென்கா சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

ஸ்பெயின் மட்ரிட் ஓப்பன் ரென்னிஸின் இறுதியாட்டம் அண்மையில் நடந்தது. இதில், உலகின் முதல்நிலை வீராங்கனையான அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டி, 7ஆவது இடத்தில் உள்ள பெலாரஸின் அரினா சபலென்கா ஆகியோர் மோதினர்.

முதல் செற்றை சபலென்கா 6-0 என மிகச் சுலபமாக கைப்பற்றினார். பின் எழுச்சி கண்ட ஆஷ்லே பார்டி, 2ஆவது செற்றை 6-3 என தன்வசப்படுத்தி பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் 3ஆவது செற்றில் அசத்திய சபலென்கா 6-4 என்ற கணக்கில் வென்றார்.

ஒரு மணி நேரம், 39 நிமிடம் நீடித்த போட்டியில் சபலென்கா 6-0, 3-6, 6-4 என்ற கணக்கில் வெற்றி பெற்று, இத்தொடரில் தனது முதல் பட்டத்தை வென்றார். இது, இவரின் 10ஆவது டபிள்யு.ரி.ஏ., ஒற்றையர் பட்டமாகும். (ஐ)





## தடுப்பூசி பெற்றார் கோலி!

புதுடில்லி, மே 11

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோலி கொரோனா தடுப்பூசியை செலுத்திக்கொண்டார்.

இந்தியாவில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகள் கடந்த ஜனவரி மாதம் 16ஆம் திகதி தொடக்கம் இடம்பெறுகின்றது.

இந்நிலையில் இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோலி, டில்லியில் தடுப்பூசியைச் செலுத்திக்கொண்டார். இதுகுறித்த தகவலை அவர் பகிர்ந்துகொண்டுள்ளார்.

அனைவரும் தடுப்பூசி செலுத்திக்கொள்ளுங்கள். பாதுகாப்பாக இருங்கள் என்று அவர் கூறியுள்ளார்.

## ஐ.பி.எல். தொடரை இங்கிலாந்தில் நடத்துக!

### பீற்றர்சன் ஆலோசனை

லண்டன், மே 11

ஐ.பி.எல். தொடரின் மீதமுள்ள போட்டிகளை இங்கிலாந்தில் செப்ரெம்பர் மாதத்தில் நடத்துங்கள் என்று இங்கிலாந்தின் முன்னாள் வீரர் கெவின் பீற்றர்சன் கூறியுள்ளார்.

கொரோனா தொற்று பரவலால் இந்தியாவில் இம்முறை நடந்த ஐ.பி.எல். தொடர் 60 போட்டிகளில் 29 போட்டிகள் நடந்த நிலையில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஐ.பி.எல். தொடரின் மீதமுள்ள போட்டிகளை இங்கிலாந்தில் நடத்த வேண்டும் என்று கெவின் பீற்றர்சன் கூறியுள்ளார்.

மீதிப் போட்டிகளை ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடத்துவது பற்றி பேசுகிறார்கள். ஆனால், மீதி போட்டிகளை இங்கிலாந்தில் நடத்த வேண்டும்.

இங்கிலாந்து - இந்தியா டெஸ்ட் தொடருக்குப் பிறகு சிறிது இடைவெளி இருக்கிறது. அனைத்து

இந்திய, இங்கிலாந்து அணிகளின் முன்னணி வீரர்களும் இங்கிலாந்தில் இருப்பார்கள். இங்கிலாந்தில் செப்ரெம்பர் இறுதியில் அற்புதமாக இருக்கும். மான்செஸ்டர், லீட்ஸ், பிர்மிங்ஹாம், லண்டனின் இரு மைதானங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஐ.பி.எல். தொடருக்கு ரசிகர்களை அனுமதிக்கவும் வாய்ப்புள்ளது. அற்புதமான சூழல் நிலவும். லோர்ட்ஸில் இந்தியாவுக்கு எதிராக இருபது - 20 போட்டியில் விளையாடியுள்ளேன். இந்திய ரசிகர்களின் ஆரவாரத்தால் வெளிநாட்டில் விளையாடுவது போல இருக்கும். அந்தளவுக்கு இங்கிலாந்தில் இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு ஆதரவு இருக்கும் - என்றார். (ஐ)

## மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 09 - 10 - 1959 | 08 - 05 - 2021 |

### சிவானந்தன் தியாகராஜா

யாழ். கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாவும், ஜேர்மனி, கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சிவானந்தன் தியாகராஜா அவர்கள் 08-05-2021 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற தியாகராஜா, சீதாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பையா, பரிபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், சுமதி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுரேன் மற்றும் சிந்துஜா, காலஞ்சென்ற ரஜீவன் மற்றும் சங்கீதா ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

சுரேஸ், மயூரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அருணாசலம், லீலா, காலஞ்சென்ற தெய்வேந்திரன் மற்றும் இந்திரா, பாலா ஆகியோரின் அருமைச் சகோதரரும், சாந்தா, கோனேஸ்வரன், நாகேஸ்வரி, பத்மநாதன், வசந்தா, மகாதேவன், காலஞ்சென்ற மைமைதாசன், மகேந்திரன், மகேஸ்வரன், மங்களேஸ்வரி, சாந்தி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், நிதுஷன், விமிஷன், ஷர்மினி, கிஷான், ஹாசினி, இனியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு
விஜய்(சதீஸ்)
+14168892355

# இந்தியா சென்ற இலங்கையர்களை திருப்பி அழைத்து வர விசேட திட்டம்

## விரைவில் செயல்படுத்தப்படும் அமைச்சர் பிரசன்ன



**கொழும்பு, மே11**

**இந்தியாவுக்குச் சென்ற இலங்கையர்களைத் திருப்பி அழைத்து வருவதற்கான திட்டம் விரைவில் செயறல்படுத்தப்படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**

இது தொடர்பான நடவடிக்கைகள் ஒரு வாரம் கழித்து எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கம்பஹாவில், வெரெல்லவத்த பகுதியில் அமைக்கப்பட்டுவரும் 2 ஆயிரம் படுக்கைகள் கொண்ட கொரோனா சிகிச்சை நிலைய நிர்மாணப் பணிகளை ஆய்வு செய்த பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப இலங்கை மற்றும் இந்திய சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்து வருவது தொடர்பாக நாங்கள் ஆராய்ந்து வருகின்றோம்.

இந்தியாவில் இருந்து சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவதை இரண்டு வாரங்களுக்குத் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கின்றோம்.

எனினும், மருத்துவ தேவைக்காகவும் மற்றும் ஏனைய தேவைகளுக்காகவும் இந்தியாவுக்குச் சென்றநபர்களை திருப்பி அழைத்து வருவது தொடர்பாக ஒரு விசேட திட்டத்தைச் செயற்படுத்துவதை விரைவுபடுத்துவோம் என்று நம்புகின்றோம்.

ஒரு வாரத்தின் பின்னர் அவர்களை ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் நாட்டுக்கு அழைத்துவர உத்தேசித்துள்ளோம்.

இலங்கையில் மாத்திரமல்ல உலகம் முழுவதிலும் உள்ள சுற்றுலாத்துறை தற்போது நெருக்கடியில் உள்ளது. எனவே, இந்தக் கொரோனா வைரஸ் தொற்றுநோயுடன் நாம் வாழப் பழக வேண்டும்" - என்றார். (இ)

# கொரோனா தொற்று பரவலால் மேலும் 16 பிரதேசங்கள் முடக்கம்

## இராணுவ தளபதி தெரிவிப்பு



கொழும்பு, மே 11

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக இலங்கையில் மேலும் 5 மாவட்டங்களில் 16 கிராம சேவகர் பிரிவுகள் நேற்று முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி கம்பஹா மாவட்டத்தில் மஹர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எடிகெஹெல்கல்ல மேற்கு கிராம சேவகர் பிரிவு, கட்டானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கேசி - சில்வா கிராம சேவகர் பிரிவு, கதிரான வடக்கு கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த எடபகஹாவத்த கிராமம், கதிரான தெற்கு கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த பேஷகர்ம கிராமம் ஆகிய பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேதவத்தை கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த மஹபமுனுகம பிரிவு, குன்ஜகஹவத்த கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 44 ஆவது லேன், நில்சிறி கிராம கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 3ஆவது மற்றும் 7ஆவது லேன் ஆகிய பிரதேசங்களும் தனிமைமப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் தெஹியத்தகண்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பக்மீதெனிய கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த ரனஹெலகம பிரிவு, சேருபிடிய கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த சேருபிடிய உப பிரிவு ஆகிய பிரதேசங்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினபுரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அங்கம்மன 182 கிராம சேவகர் பிரிவு, களுத்துறை மாவட்டத்தில் மொரகஹஹேன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பலன்னொருவ 604 கிராம சேவகர் பிரிவு, கொரலஹிம 604 ஏ கிராம சேவகர் பிரிவு, கும்புக மேற்கு 607 ஏ கிராம சேவகர் பிரிவு, ஹொரணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நர்த்தனகல 606 சி கிராம சேவகர் பிரிவு ஆகிய பிரதேசங்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், மொனராகலை மாவட்டத்தில் மொனராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போஹிடிய கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி மேலும் கூறினார். (இ)

# மலையகத்திலும் எகிறும் தொற்றாளர் எண்ணிக்கை

கண்டி, மே 11

மலையகத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. அந்தவகையில், கண்டி மாவட்டத்தில் 127 பேருக்கும், நுவரெலியா மாவட்டத்தில் 55 பேருக்கும் கொரோனாத் தொற்று நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், மாத்தளை மாவட்டத்தில் 75 பேருக்கும் கொரோனாத் தொற்று நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் 192 பேரும், கேகாலை மாவட்டத்தில் 26 பேரும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சப்ரகமுவ மாகாணத்தில் பதுளை மாவட்டத்தில் 32 பேருக்கும், மொனராகலை மாவட்டத்தில் 36 பேருக்கும் நேற்றுமுன்தினம் வைரஸ் தொற்றியுள்ளது. (இ)

# 'சினோபார்ம்' கொரோனா தடுப்பூசிகளை இலங்கையில் உற்பத்தி செய்ய நடவடிக்கை

## இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தகவல்

கொழும்பு, மே 11

சீனாவின் 'சினோபார்ம்' கொரோனாத் தடுப்பூசியை இலங்கையில் உற்பத்தி செய்வது குறித்து சீனத் தூதருடன் கலந்துரையாடி வருகின்றோம் என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.



கொழும்பிலுள்ள சீனத் தூதரகம், 'சினோபார்ம்' தடுப்பூசியைத் தயாரிப்பதற்கான மூலப்பொருட்களை இலங்கைக்குக் கொண்டு வருவதன் மூலம் இந்தத் தடுப்பூசி உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து ருவிட்டரில் பதிவிட்டுள்ள சீனத் தூதரகம், "இலங்கையில் சீனத் தடுப்பூசிகளை உற்பத்தி செய்வதற்கு தேவையான வசதிகள் குறித்து இலங்கை அதிகாரிகளுடன் ஆலோசித்து வருகின்றோம்" என்று குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, இலங்கைக்கு சீனாவிலிருந்து காலாவதி திகதியை அண்மித்த கொரோனாத் தடுப்பூசிகள் அனுப்பப்பட்டுள்ளன என்று சில ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன என்றும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண கூறினார்.

எனினும், சீனாவின் 'சினோபார்ம்' தடுப்பூசிகள் சமீபத்தில் உருவாக்கப்பட்டன என்றும், இவை காலாவதியாக இன்னும் இரண்டு ஆண்டுகள் இருக்கின்றன என்றும் சன்ன ஜயசுமண சுட்டிக்காட்டினார்.

சீனாவின் 'சினோபார்ம்' கொரோனாத் தடுப்பூசியின் அவசர கால பாவனைக்கு உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதியளித்ததைத் தொடர்ந்து இலங்கை, நாட்டு மக்களுக்குத் தடுப்பூசி செலுத்தும் பணியை கடந்த சனிக்கிழமையிலிருந்து ஆரம்பித்தது. (இ)

# சீனாவிடமிருந்து இலங்கைக்கு ஒட்சிசனை நன்கொடையாக கோரியுள்ளார் மஹிந்த



கொழும்பு, மே 11

இலங்கையில் கொரோனா வைரஸ் நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துச் செல்லும் நிலையில் நோயாளர்களுக்குத் தேவையான ஒட்சிசன் மற்றும் சுவாச உதவி உபகரணங்களைச் சீனாவிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக்கொள்வதற்கு அரசு எதிர்பார்த்துள்ளது.

இது தொடர்பான கோரிக்கைக்கடிதம் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் ஆலோசனைக்கமைய பிரதமர் அலுவலகத்ததால் சீனத் தூதுவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என 'டெய்லி மிரர்' செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக் கோரிக்கை தொடர்பாக கவனம் செலுத்தியுள்ளதாகவும், கூடிய விரைவில் அவற்றை இலங்கைக்கு வழங்கி வைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் சீனத் தூதரகம் கூறியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது பல்வேறு நாடுகள் சீனாவிடமிருந்து மருத்துவ உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்காகக் கோரிக்கைகளை விடுத்து வருகின்றன என்றும், இந்த விடயத்தில் சீன அரசு இலங்கை பிரதமரின் கோரிக்கைக்கு முன்னிலை கொடுத்து நடந்து கொள்ளும் என்றும் தூதரகப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. (இ)

# தனிமைப்படுத்தல் விதியை மீறும் சாரதிகள் மீதும் கடும் நடவடிக்கை

## நேற்று தொடக்கம் கண்காணிப்பு பணி ஆரம்பம் என்கிறார் பொலிஸ் பேச்சாளர்



கொழும்பு, மே 11

தனிமைப்படுத்தல் விதிகளை மீறும் பொதுப் போக்குவரத்து சேவைகளைக் கண்காணிக்கும் விசேட நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

தனிமைப்படுத்தப்பட்ட விதிகளை மீறும் அனைத்து சாரதிகள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதன்படி பஸ்கள், ஓட்டோ சாரதிகள் பொதுப் போக்குவரத்தில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

பொதுப் போக்குவரத்து தொடர்பாக வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். எனவே, பொதுப் போக்குவரத்து பரிந்துரைகள் குறித்து பொதுமக்கள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண மேலும் தெரிவித்தார். (இ)

## மாகாணங்களுக்கு...

ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க நேற்றிரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார். அவரது அறிக்கையின் விபரம் வருமாறு:

கோவிட் 19 தொற்றுநோய் நிலைமைகளுடன் நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறார். இந்த தொற்றுநோயிலிருந்து நாட்டையும் மக்களையும் காப்பாற்றுவதற்காக அவர் அனைத்து தரப்பினருடனும் மேற்கொண்ட கலந்துரையாடலின் மூலம் முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

500,000 அஸ்ட்ரா செனகா தடுப்பூசிகள் இலங்கைக்கு இலவசமாக கிடைக்கப் பெற்றதுடன், மேலும் 500,000 தடுப்பூசிகளை அரசாங்கம் கொள்வனவு செய்தது. மேலும் 265,000 தடுப்பூசிகள் எமக்குக் கிடைக்கப் பெற்றன. அதன்படி, இலங்கைக்கு 12 லட்சத்து 65,000 அஸ்ட்ரா செனகா தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றன. முதல் தடுப்பூசி ஏற்றலின் போது, 9,25,000 தடுப்பூசிகள் வழங்கப்பட்டன. இந்தியாவில் அண்மையில் ஏற்பட்ட நிலைமை காரணமாக, இரண்டாம் கட்ட தடுப்பூசிகளைப் பெறுவதில் நெருக்கடி ஏற்பட்டது. இரண்டாவது தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளுக்கு சுமார் 600,000 அஸ்ட்ரா செனகா தடுப்பூசி தேவை என்று சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். அதனைப் பெறுவதற்காக அரசாங்கம் தற்போது பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடி வருகிறது.

இதற்கிடையில், இலங்கைக்கு சீனாவிடமிருந்து 600,000 சினோபார்ம் தடுப்பூசிகள் நன்கொடையாக கிடைக்கப்பெற்றன. இதனைப் பயன்படுத்த உலக சுகாதார தாபனத்தின் ஒப்புதல் கிடைத்திருக்கவில்லை எவ்வாறாயினும், கடந்த வெள்ளிக்கிழமை சூம் தொழில் நுட்பத்தின் ஊடாக உலக சுகாதார தாபனத்துடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடத்திய கலந்துரையாடலின் விளைவாக, அன்று மாலையிலேயே உலக சுகாதார தாபனம் “சினோபார்ம்” தடுப்பூசிகளை அவசர பயன்பாட்டிற்கு ஒப்புதல் அளித்தது.

அதன்படி, மறுநாள் ‘சினோபார்ம்’ தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு, ஒரு நாளைக்கு 25,000 தடுப்பூசிகள் வீதம் முதலில் மேல் மாகாணத்தில் தடுப்பூசிகளை ஏற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. சீனாவிடமிருந்து 03 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகளைப் பெறுவதற்காக சீன அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளன. அத்தத் தடுப்பூசிகள் கிடைத்தவுடன் ஏனைய மாகாணங்களிலும் தடுப்பூசி ஏற்றும் பணிகளை ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ரஷ்யாவின் ஸ்புட்னிக் தடுப்பூசியையும் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது. முதல் கட்டத்தில், இலங்கைக்கு 15,000 தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. ஸ்புட்னிக் தடுப்பூசி முறையானது பயன்படுத்தப்படும் ஏனைய தடுப்பூசிகளிலிருந்து சற்று வித்தியாசமாக இருப்பதால், எமது சுகாதாரத் துறை புதிய முறைமைகளை பின்பற்றி கொத்தட்டுவ பகுதியில் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையை ஆரம்பித்தது. இதன் இரண்டாம் கட்டத்தின் கீழ், 85,000 தடுப்பூசிகள் விரைவில் கிடைக்கவுள்ளன.

அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் இந்த தடுப்பூசியின் மூலம் வெற்றிகரமான பெறுபேறுகளை பெற்றுக்கொண்டுள்ளதைப் போன்று எங்களுக்கும் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை மூலம் தற்போதைய நிலைமையை வெற்றிகரமாக கட்டுப்படுத்த முடியும் என்பதுடன், இலங்கையின் வலுவான சுகாதார அமைப்பு மற்றும் ஒட்டுமொத்த சுகாதார பணிக் குழாமினர் தொடர்பில் ஜனாதிபதி அவர்கள் பூரண நம்பிக்கையை வெளியிட்டுள்ளார்.

உலக சுகாதார தாபனம் ஜனாதிபதி அவர்களுடன் கலந்துரையாடிய அனைத்து சந்தர்ப்பங்களிலும் இலங்கையின் வலுவான சுகாதார சேவை முறையை பாராட்டியுள்ளது. இருப்பினும், இந்த எல்லா சூழ்நிலைகளுடனும், கோவிட் 19 தொற்றுநோயைக் கட்டுப்படுத்த மக்களின் அர்ப்பணிப்பும் மிக முக்கியமானது என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டுகிறார்.

அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் இணங்க சுகாதாரத் துறை வழங்கியுள்ள ஆலோசனைகளை பின்பற்றி சமூக இடைவெளியை பேணுதல், மற்றும் தேவையற்ற கூட்டங்களைத் தவிர்ப்பது போன்ற சமூகப் பொறுப்புகளில் அனைத்து பிரஜைகளும் கவனம் செலுத்துவது ஒரு ஆரோக்கியமான தேசத்திற்கு வழிவகுக்கும் என்று ஜனாதிபதி நம்புகிறார்.

கோவிட் 19 தொற்றுநோயை ஒழிக்க அனைத்து தரப்பினருடனும் ஜனாதிபதி மேற்கொண்ட கலந்துரையாடல்களின் விளைவாக, எதிர்வரும் மே 30ஆம் திகதி வரை,

■ அனைத்து மாகாணங்களுக்கும் இடையில் பயணக் கட்டுப்பாடுகளை விதித்தல்,

■ மக்கள் ஒன்றுகூடும் அனைத்து கூட்டங்களையும் ரத்து செய்தல்,

■ வர்த்தக நிலையங்களுக்குள் பிரவேசித்தல், தங்கியிருக்கக்கூடிய நபர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தல்

■ நோய்த்தொற்றாளர்கள் அதிகமாக காணப்படும் பகுதிகளை தனிமைப்படுத்துதல்,

போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். எவ்வாறாயினும், இந்த கட்டுப்பாடுகளை விதிக்கும் போது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படாத வகையிலும் நாட்டின் அத்தியாவசிய சேவைகள் தொடர்ச்சியாக பேணப்படும் வகையிலும் முறையான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று ஜனாதிபதி வலியுறுத்தினார். அரசாங்கத்தின் இந்த வேலைத்திட்டத்திட்டங்களுக்கு ஏற்ப நாட்டு மக்கள் பொறுப்புடன் செயற்படுவார்கள் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நம்பிக்கை கொண்டுள்ளார்.

## யாழ்ப்பாணத்தில்...

சாலை, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 778 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்படி, யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மிக அதிக தொற்றாளர்களாக - 22 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதில் 18 பேர் ஏற்கனவே, தனிமைப்படுத்தலில் இருந்தவர்கள் என்றும் மற்றைய 4 பேர் எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இனங்காணப்பட்டவர்கள் எனவும் தெரியவந்தது.

தவிர, சண்டில்ப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேரும், கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். இத்துடன், யாழ். போதனா வைத்தியசாலையின் தனிமைப்படுத்தல் விடுதியில் இருந்த பொலிஸார் ஒருவர் உட்பட 4 பேரும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்காக வந்த ஒருவருமாக 36 பேர் நேற்று தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

இதேபோன்று, முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவர் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டார். இவர், முல்லைத்தீவு பொது மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் தொற்று அறிகுறியுடன் சிகிச்சை பெற வந்த வராவார். (ஐ - 3)

# பணியாளருக்கு கொரோனா தொற்று நெல்லியடியில் வெதுப்பகத்துக்கு சீல்

வடமராட்சி, மே 11

நெல்லியடியில் இயங்கிவரும் பிரபல வெதுப்பகத்தில் பணியாற்றும் பணியாளர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து சுகாதாரப் பிரிவினரால் அந்த வெதுப்பகம் மூடப்பட்டுள்ளது.

நெல்லியடியில் இயங்கிவரும் பிரபல வெதுப்பகத்தில் பணியாற்றுபவர்களிடம் பெறப்பட்ட பி.சி.ஆர். மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்தே, குறித்த வெதுப்பகத்தை கரவெட்டி மருத்துவ அதிகாரி பிரிவு மூடியது.

இதேவேளை, கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நேற்று 18 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் இருவருக்கு தொற்று உறுப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ - 2)

# கொரோனாவை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு உதவுங்கள்

## எதிர்கட்சியினரின் ஆதரவை கோரினார் நாமல்



கொழும்பு, மே 11

எதிர்கட்சியினர் அரசியல் வேறுபாடுகளை மறந்துவிட்டு கொரோனா வைரசினை கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளிற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யதார்த்தபூர்வமான தீர்மானங்களை எடுப்பதில் எதிர்கட்சியினர் சுகாதார அமைச்சருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். அரசாங்கம் எதிர்கட்சியின் கருத்தினை மதிப்பதாக தெரிவித்த அவர், எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தை விமர்சிக்க கூடாது மாறாக ஆதரவளிக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## குருந்தூர்மலை...

தூர்மலைப் பகுதிக்கு வருகை தரவுள்ளார் என்று அறிய வருகின்றது.

புனர்நிர்மாணப் பணிகளை இன்றைய தினம் ஆரம்பிப்பதற்காக நேற்றிரவு முழுவதும் பிரித் ஓதும் நிகழ்வு இடம்பெற்றதாக அங்கிருக்கும் நமது செய்தியாளர் தெரிவித்தார்.

இராணுவத்தினரின் ஏற்பாட்டில் நடக்கும் இந்த நிகழ்வில், 29 பௌத்த பிக்குகள் மற்றும் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், அப்பகுதியில் நிலைகொண்டுள்ள முப்படையினர், முப்படைகளின் கட்டளையிடும் அதிகாரிகள் எனப் பலர் பங்கேற்றுள்ளனர். மேலும், அவர்கள் குருந்தூர் மலைப் பகுதியில் பந்தல்கள் அமைத்தல்இ தோரணங்கள் கட்டுதல் எனப் பல அலங்கார வேலைகளில் நேற்று முழுவதும் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனினும், இந்த நிகழ்வு குறித்து பொலிஸாருக்கோ அல்லது மாவட்ட நிர்வாகம், சுகாதாரப் பிரிவினருக்கோ எந்த அறிவித்தலும் விடுக்கப்படவில்லை என்று அந்த துறைகள் சார்பில் பேசவல்லவர்கள் தெரிவித்தனர். அத்துடன், இந்நிகழ்வு முழுமையாக இராணுவத்தினராலேயே ஒழுங்குபடுத்தப்பட்டதாக உள்ளது என்று தெரியவருகின்றது.

சைவ மக்களின் வழிபாட்டிடமாக காணப்பட்ட குருந்தூர்மலை பகுதியில் பௌத்த தொல்லியல்கள் உள்ளன என்று கூறி தொல்லியல் திணைக்களம், பௌத்த பிக்குகள் சிலர் அப்பகுதியை தம்வசப்படுத்தினர். இதைத் தொடர்ந்து இடம்பெற்ற ஆராய்ச்சிகளை பகிரங்கப்படுத்தாமலேயே, அது பௌத்த தொல்லியல் பிரதேசம் என்று அறிவிக்கப்பட்டது. இதற்கு தமிழர் தரப்பின் வரலாற்றறிஞர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இப்பகுதி நாகர் கால சிவன்கோயில் என்று யாழ். பல்கலைக்கழக வேந்தரும் வரலாற்றுப் பேராசிரியருமான எஸ். பத்மநாதன் கூறியிருந்தார்.

இந்நிலையில்இ நாட்டில் கொரேனா பெருந்தொற்று தீவிரமாகப் பரவிவரும் நிலையில், அவசர அவசரமாக குருந்தூர் மலையில் பௌத்த விகாரை புனர்நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றமை அப்பகுதி மக்களிடையே பெரும் அதிர்ச்சியையும்சந்தேகங்களையும் ஏற்படுத்தியுள்ளன.

இதனிடையேஇ இந்த நிகழ்வு குறித்து செய்தி சேகரிக்கவோ அல்லது அங்கு செல்லவோ தமிழ் ஊடகவியலாளர்கள் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பஸ்...

முதல் எதிர்வரும் 30ஆம் திகதி வரை மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் உத்தரவுக்கமைய விதிக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கை போக்குவரத்து சபை மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளது. (இ)

## முழுநாட்டையும்...

களை நிறுத்தாது முன்னெடுத்தோம்.

நாட்டின் தொற்றுநோய் பரவலுக்கு ஏற்ப பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும்.

தற்போது அரசு அதனை வெற்றிகரமாக செய்து வருகின்றது. கொரோனாத் தொற்று அதிகமான பகுதிகள் அடையாளம் கண்டு மருத்துவர்களின் ஆலோசனைகளுக்கு அமைய தனிமைப்படுத்தல்களை அரசு முன்னெடுத்துள்ளது.

எனவே, அவசியமான பகுதிகள் மட்டுமே தனிமைப்படுத்தப்பட வேண்டும். அத்தோடு தனிமைப்படுத்தும் பகுதிகளில் நோய்த் தொற்று குறையும்போது அவை விடுவிக்கப்படுகின்றன.

மக்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் உள்ளனர். இதன் போது நாடு முழுவதும் முடக்கப்பட்டால் அவர்கள் ஒரு பெரிய நெருக்கடியை எதிர்கொள்வார்கள்.

அதன்படி, மருத்துவ மற்றும் நிபுணர்களின் ஆலோசனைக்கு அமைய நோயாளர்கள் பதிவாகும் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு தற்போது சரியான நடவடிக்கைகளை நாங்கள் பின்பற்றுகிறோம்” - என்றார்.

உண்மையான தரவுகளை ஆராய்ந்து, அனைத்து மக்களுடனும் கலந்துரையாடிய பின்னர் இந்தத் தனிமைப்படுத்தல்களை மிகவும் கவனமாகச் செய்து வரும் நிலையில், முழு நாட்டையும் முடக்க வேண்டிய அவசியம் இன்னும் ஏற்படவில்லை” - என்றார். (இ)

ஈழநாடு
Eelanadu

வடக்கு கடற்றொழில் அபிவிருத்தி தொடர்பில்

## ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கடற்றொழில் அமைச்சு பேச்சு!

யாழ்ப்பாணம், மே 11

வடக்கு மாகாணத்தில் நிலைபேறான கடற்றொழில் அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கிலான கலந்துரையாடல் ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகளுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையில் இடம்பெற்றுள்ளது.

மெய்நிகர் வழியில் நேற்று இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில், கடந்த ஆட்சியாளர்களின் தவறான அணுகுமுறை காரணமாக கைவிடப்பட்ட பெரும் அபிவிருத்தி திட்டம் தொடர்பில் ஆசிய அபிவிருத்தி வங்கி மீளாய்வு செய்ய வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை முன்வைத்தார் என்று கூறப்பட்டது.

பருத்தித்துறை, பேசாலை, குருநகர் ஆகிய துறைமுகங்கள் மற்றும் இறங்குதுறைகள், நங்கூரமிடும் தளங்கள் உட்பட பல்வேறு வேலைத் திட்டங்கள் உள்ளடக்கப்பட்ட பாரிய அபிவிருத்தி திட்டத்திற்கான நிதியுதவியை வழங்குவதற்கு கடந்த ஆட்சிக் காலத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்தது. எனினும், அப்போதைய ஆட்சியாளர்களின் தவறான அணுகுமுறை காரணமாக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் குறித்த திட்டத்தை கைவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இந்நிலையில், கைவிடப்பட்ட அபிவிருத்தி திடடத்தை மீளச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பில் நேற்று பேசப்பட்டதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

மேலதிக அரச அதிபருக்கு தொற்று

## யாழ். மாவட்ட செயலகத்தின் இரு கிளைகள் மூடப்பட்டன!

யாழ்ப்பாணம், மே 11

**யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம. பிரதீபனிற்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டமையால், செயலகத்தின் இரு கிளைகள் மூடப்பட்டன. அத்துடன், 22 பேருக்கு பி.சி.ஆர். மாதிரிகளும் நேற்று பெறப்பட்டன. மாவட்ட செயலகத்தின் நிர்வாகம், ஸ்தாபனக் கிளைகளே இவ்வாறு முழுமையாக மூடப்பட்டன. அத்துடன், அங்கு பணியாற்றும் சகல பணியாளர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.**

இதேநேரம் மேலதிக செயலாளருடன் அண்மித்து பணியாற்றிய 22 பேரிடம் பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன. மேலும், மாவட்ட செயலகத்தின் பல கிளைகளின் உத்தியோகத்தர்களிற்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்வது தொடர்பிலும் தீர்மானிக்கப்படுகின்றது.

இதேவேளை, யாழ். மாவட்ட செயலகத்தில் 450இற்கும் மேற்பட்டவர்கள் பணியாற்றுகின்றனர். இந்நிலையில், நேற்று சுமார் 100 வரையானோரே கடமைக்கு சமுகமளித் தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

## மட்டக்களப்பில் சுற்றிவளைப்பு விதிகளை மீறிய பலர் கைது!

மட்டக்களப்பு, மே 11

மட்டக்களப்பு நகரப் பகுதியில் முகக்கவசம் அணியாதோர், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சுதத் மாரசிங்க தலைமையில் மட்டக்களப்பு நகர பகுதியில் விஷேட சுற்றிவளைப்பு நடவடிக்கை இடம்பெற்றது. இதன்போது, மட்டகளப்பு நகரப் பகுதியில் முகக்கவசம் அணியாதோர் மற்றும் சுகாதார நடைமுறையை பின்பற்றாதோர் பலர் கைது செய்யப்பட்டு அன்ரிஜென் பரிசோதனைக்கு உட்படுத்தபட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதேபோன்று, மட்டக்களப்பு நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள், வீதிகளில் முகக்கவசம் அணியாதோர் மற்றும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதோர் பலர் கைது செய்யப்பட்டு அன்ரிஜென் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

மேலும், மட்டு நகர் பகுதிகளில் 2 பிரிவாக சென்று பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் தொற்று நீக்கும் வகையில் கிருமி நாசினி திரவம் விசிறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மரண அறிவித்தல்

மலர்வு 09 - 06 - 1931



உதிர்வு 07 - 05 - 2021

### தம்பிமுத்து நடராஜா

**(இளைப்பாறிய அதிபர் யாழ்ப்பாணம் யூனியன் கல்லூரி தெல்லிப்பழை)**

யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கோப்பாய், மாலைதீவு, கனடா ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்ட திரு.தம்பிமுத்து நடராஜா அவர்கள் 07.05.2021 அன்று கனடாவில் காலமானார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை தம்பிமுத்து- ராஜேஸ்வரி (மஜம்மா) தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நில அளவையாளர் சின்னத்துரை - கண்ணம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சரஸ்வதிதேவி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பத்மாவதி மகாதேவா (பேபி) மற்றும் தியாகராஜா(லண்டன்), செல்வராஜா(கொழும்பு ஆகியோரின் அன்புச் சகோதரும்

காலஞ்சென்ற ரஞ்சித் மற்றும் நிரஞ்சன் (மிசிசுக- கனடா), நந்தினி (பிரம்ப்ரன் -கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயந்தி,காலஞ்சென்ற பிரதீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் நிதுரா,சாயிலியன்,சஜித், கிறிஸ்ணிதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம்

Wednesday, 12 May 2021 9:00 AM - 11:00 AM
St John's Dixie Cemetery & Crematorium
737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

**தகவல்:**
**குடும்பத்தினர்**

பூதவுடலை பார்வையிட விரும்புவோர் நிரஞ்சனுடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**மகன். நிரஞ்சன் - 0016475428901 -கனடா**

## மரண அறிவித்தல்

மலர்வு 21 - 03 - 1934



உதிர்வு 10 - 05 - 2021

### விஸ்வலிங்கம் சிவஞானம்

**(திரவியம்)**

யாழ். உடுப்பிட்டி வாசிகசாலையடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் சிவஞானம் அவர்கள் 09.05.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - செல்லாச்சி தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை - லெட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்புமிகு மருமகனும், அன்னபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும், ரவீந்திரன், செந்தமிழ்ச்செல்வன், பத்மாவதி, ரமேஸ், காலஞ்சென்ற கவிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருஞானம்(சுந்தரி), காலஞ்சென்ற சொர்ணகாந்தி ஆகியோரின் பாசமிகு சகோதரரும்,மகேஸ்வரி, காலஞ்சென்ற செல்வராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெயதீஸ்வரன், ராதா, நித்தியா, வாணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,ரதீபன், ராகவி, பானுஜன், ஹோவர்த்தனன், சஞ்சீவி, அபிஷாந், சந்தோஷி, மகிபன், ஹரிசாந், பிரணவி ஆகியோரின் அன்புப் பேரனும்,நிநிந்தன், நிநிந்தினி, நிநிந்துஜா, நிநிந்தீபன், நிநிந்துறுபன் ஆகியோரின் பாசமிகு தாய்மாமனும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு**
**ரமேஸ் - மகன்: +447453940737**
**செல்வி - மகள் :+41765030599**
**செல்வன் - மகன்: +447479418414**
**அன்னபாக்கியம்-மனைவி:+94766100610**
**குடும்பத்தினர் : + 94766100610**
**: +94212263960**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.05.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்




6.31 மணி : தினம் ஒருதிருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவிலலீசன்
6.35 மணி : மதம் சார்பானநற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையபலன்
வழங்குபவர் : சைவசித்தாந்தபண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதிகோகிலாமகேந்திரன்
7.15 மணி : கதைவழிஅறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்.அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர்,நல்லூர்
7.20 மணி :சித்தமருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றையபத்திரிகைகளில்
8.30 மணி : காலைசெய்திகள்
9.00 மணி : கலாட்டாகாலை-நேரலை
10.30 மணி :தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி :சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**
1.00 மணி :மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி :சுப்பர் சீன்ஸ்-போக்கிரி,மிஸ்ரர் லோக்கல் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி :குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி




5.30 மணி :குறுந்திரைநேரம்
6.00 மணி : சினிமாசினிமா-சினிமா தகவல்கள்




6.30 மணி : மூவிடோக்கீஸ்
இரவு
7.00 மணி :கதைநேரம்-நகைச்சுவைநிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி :சங்கப்பலகை-இலக்கியநிகழ்ச்சி
10.00 மணி :நேருக்குநேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)

**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே ( நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்